
omi

# அஞ்சலி
# ANJALI
MAGAZINE

தீபம் 1
சுடர் 4

சித்திரை - ஆனி - 2008

PUBLIC LIBRARY
JAFFNA
SEP 2011



## உள சமூக ஆன்மீக இலக்கிய சஞ்சிகை

PUBLIC LIBRARY
JAFFNA

# அஞ்சலி

## 2008



PUBLIC LIBRARY
JAFFNA

வெளியீடு

அஞ்சலியகம்

நெல்லண்டை - தும்பளை

பருத்தித்துறை

# அஞ்சலி

உள, சமூக, ஆன்மீக, இலக்கிய சஞ்சிகை

| உள்ளே ....... | தீபம் - 1<br>சுடர் - 4 , விலை - 40/= |
|---|---|
| திருக்கேதீச்சரம்<br>மறந்துபோன சில<br>குறளுக்கோர் உரை<br>இயேசு இன்று சிலுவையில் . .<br>வேண்டுதல்<br>பெண்மையைப் போற்றுவோம்<br>மெல்லச் சிரியுங்கள்<br>என்பாட்டில் நான்<br>கணினி சார்புடைய .....<br>ஆபத்து விளிப்பில் உள்ளோர்.<br>**Freshwater Birds**<br>உளமதில் ஒளி நிறைந்த..<br>புது யுகம் படைப்போம்<br>சிந்திக்க சில வரிகள்.<br>ஆசையில் ஓர் இனம்<br>அஞ்சலியே<br>போரின் துயரம்<br>சிறைக் கூடு<br>இளம் விஞ்ஞானி விருது 2006<br>Methodistha ...<br>ஆங்கிலம் படிப்போம்<br>மகா சிவராத்திரி விரதம்<br>என்றும் இளமையே ....<br>அஞ்சலியகத்தினால் ....<br>நெஞ்சல் நிறைந்தவை | <u>ஆசிரியர்</u><br>அருட்தந்தை<br>எஸ்.டேமியன் omi(MA)<br><u>ஆலோசகர்</u><br>அருட்தந்தை.T.எட்வின்<br><br><u>கணினி வடிவமைப்பு</u><br>ஜெஸ்வின் கணினிப் பயிற்சியகம்<br>2ம் குறுக்குத்தெரு,<br>பருத்தித்துறை<br><br>பதிப்பகம்<br>New S.P.M. - V.M.Road,<br>Point Pedro<br><br>Anjali Aham<br>Nellandai,<br>Thumpalai<br>Point Pedro<br>Jaffna - Srilanka |

# ஆசிரியர் எழுதுகிறார் . . .

## அன்பு அஞ்சலி வாசகர்கட்கு


பங்குனி மாதம் 08ம் திகதி சர்வதேச மகளிர் தினமானது "பெண்களிற்கும் யுவதிகளிற்குமான முதலீடு" என்ற இவ்வருட மகளீர் தின மையப்பொருளில் நடைபெற்றது. பெண்களின் உரிமைகள், கடமைகள், சமத்துவம் ஒவ்வொரு ஆண்டும் பேசப்படுகின்றது, எழுதப்படுகின்றது. ஆனால் அதற்கு முழுச் செயல் வடிவமும் கொடுக்கப்படுவதில்லை. ஏனென்றால் இன்றும் பெண்களின் வாழ்வு அடிமைகளாக, அடைபட்டவர்களாக, சிறைப்பட்டவர்களாகவே காணப்படுகின்றது. இந்த நிலை மாற வேண்டும் என்றால் பெண்களே முதலில் விழிப்புணர்வு கொண்டவர்களாக தங்களின் நிலையை உணர்ந்து கூட்டாக, குழுவாக செயல்பட வேண்டும்.

மனித வளர்ச்சிக்கு பெண்களும் இன்று நிறையப்பங்களிப்புச் செய்துகொண்டிருக்கின்றார்கள். சந்திரமண்டலப் பயணம், விமானம் ஓட்டுதல் சிறந்த உதாரணங்களாகும். எல்லாப் பெண்களும் தங்களுக்குள் புதைந்திருக்கும் சக்திகளை, ஆற்றல்களை, திறமைகளை வெளிக்கொணர்ந்து தங்களின் முதலீட்டை பெருக்கிக் கொள்ள வேண்டும். முதலீடு அப்படியே இருந்து விட்டால் ஒன்றுக்கும் உதவாமல் போய்விடும். எனவே ஒவ்வொரு பெண்களும் தங்களிடம் அடங்கிக் கிடக்கும் மாபெரும் சக்திகளை வெளிக்கொணர்ந்து ஆளுமைமிக்க பெண்களாக மிளிர வேண்டும். தங்களின் வாழ்வை மேம்படுத்த பிரயோசனமுள்ளதாக்க தாங்கள் யார்? தங்கள் வாழ்வின் அர்த்தமென்ன? பொருளென்ன? என்பதை உணர்ந்து தேட வேண்டும். தங்களைப் பற்றிய அடிப்படைக் கேள்விகளைக் கேட்டு தங்களிற்கு வாழ்க்கையில் வரும் சவால்களை வளர்ச்சியாகக் கருதி நாளுக்கு நாள் வளர்ந்து வரும் போது அவர்களால் ஒரு புதிய சமுதாயத்தை உருவாக்கி தங்களிற்குத் தாங்களே விடுதலையைப் பெற்றுக் கொள்ள வேண்டும். முதலீடு செய்து முன்னேறி வாழ மனமார்ந்த வாழ்த்துக்கள்.

அருட்தந்தை எஸ்..டேமியன் (அ.ம.தி)
இயக்குனர்
அஞ்சலி அகம் .



# திருக்கேதீச்சரம்



1) திருக்கேதீச்சரம் இலங்கையில் உள்ள சிவத்தலம்.

2) இது தேவாரப் பாடல் பெற்ற தலம் ஆகும்.

3) இது மன்னாரில் மாந்தோட்டத்தில் அமைந்துள்ளது.

4) இங்கு திருக்கேதீச்சரநாதர் கௌரி அம்பாள் சமேதரராய்எழுந்தருளியுள்ளார்.

5) இங்கு பாலாவித்தீர்த்தம் உண்டு.

6) அடியார்கள் பாலாவிதீர்த்தத்தில் நீராடி அருள் பெறுவர்கள்.

7) இங்கு மகாசிவராத்திரி சிறப்பாக அனுட்டிக்கப்படும்.

8) இத்தினத்தன்று அடியார்கள் தீர்த்தக்காவடி எடுப்பார்கள்.

9) இங்கு பழமையான மாகாலிங்கமும்உண்டு.

10) நாமும்திருக்கேதீச்சரம் செல்வோம் அங்குள்ள இறைவனை வழிபட்டு அருள்பெறுவோம்.

க.சேதுகானன்
தரம் -2A
யா/கற்கோவளம் மெ. மி. த.க பாடசாலை

வெளியீடு : அஞ்சலியகம், நெல்லண்டை, தும்பளை, பருத்தித்துறை

வெளியீடு : அஞ்சலியகம், நெல்லண்டை, தும்பளை, பருத்தித்துறை

# மறைந்து போன கவிதை

அடுத்த நாள் காலையிலே பரீட்சை தொடங்க இருக்கிறது. எல்லா மாணவர்களும் அன்று இரவு படித்துக்கொண்டுதான் இருப்பார்கள் இருக்கவேண்டும். ஆனால் ஒருவன் மட்டும் கணிதபாடம்படிக்காமல் கவிதை புனைவதில் ஆர்வமாக இருந்தான் கவிதை எழுதுவது ஒன்றும் அவனுக்குப் புதிதல்ல. ஆனாலும் பரீட்சைக்கு உரிய பாடம் படிக்காமல் கவிதை எழுதுவதே புதுமை.

கபிலன் 11ம் தரம்தான் கல்வி கற்கின்றான். அவனுக்கும் பாடங்களுக்கும் வெகுதூரம். படிப்பில் பிடிப்பே இல்லை. கவிதை என்றால் கபிலன் என்று எல்லோரும்சொல்ல வேண்டும்என்ற குறிக்கோளை அடைய ஆசைப்படும் ஜீவன் கபிலன் மட்டுந்தான்.அவனதுகுடும்பத்திலே இவன்தான் ஒரேவாரிசும் மூத்த வாரிசும் கூட.கபிலனின் அம்மா ஒருஇருதய நோயாளி. அவனது அப்பாவோஒரு கூலித்தொழிலாளி. கபிலனின்அம்மா மீதுஅவனுக்குப் பாசம்இருக்கின்றது .ஆனாலும் நோயான தாயை அவன் வீட்டுவேலை செய்யவைப்பது அவன்தன் தாய்மேலேவைத்திருந்த அன்பை வெளிப்படையாகக்காட்டி நின்றது. கபிலனின் அம்மாவிற்கு ஒரே ஆசை தனது மகன் படித்து ஒருவேலை எடுத்து அதில் இருந்து கொண்டு வரும் சம்பளத்திலேதான் ஒருபுடைவை வாங்கிக்கட்டவேண்டும் என்பதே அவரதுஅந்த ஆசை ஆகும்.

கபிலன் நன்றாகப்படிக்க வேண்டும்என்றுஅவனது தாய் வேண்டும் தெய்வங்களிற்கு அளவே இல்லை. ஆனாலும் கபிலனுக்கு கடவுள் நம்பிக்கை என்பது சற்றும் கிடையாது. கபிலனின் அப்பா வேலை செய்துவரும் பணத்தினைக் கொடுப்பது மட்டும்தான். காலையிலே வேலை செய்யச்சென்றால் மாலையிலே வீட்டிற்குத்திரும்புவார்.வரும்போது அன்றைய சாப்பாட்டிற்கு ஏதேனும் வாங்கி வருவார் இரவு வந்து

வேலை செய்த களைப்பினைப் போக்க குடித்து வீட்டு படுத்து விடுவார். இதனால் கபிலன் என்ன செய்கின்றான்? படிக்கின்றானா? படிப்பது போல் நடிக்கின்றானா? என்பது தொடர்பாக எதுவுமே அவருக்குத்தெரியாது.

கபிலனின் அம்மாவே அடிக்கடிசென்று கபிலனின் படிப்பை நோட்டம் விடுவார். ஆனாலும் கபிலன் தன்அம்மா வரும்போது மட்டும் படிப்பதுபோல் நடிப்பான். பின்னர் தனது கவிதையைத்தொடருவான். வீட்டில் மட்டுமல்ல பாடசாலையிலும் கபிலன் பாடங்களைப் படிப்பது கிடையாது. அங்கும் கவிதைதான் எழுதுவான். இதனால் அநேக ஆசிரியர்களினதும் ஏச்சுக்களுக்கும் அடிகளிற்கும் உட்பட்டு இருக்கின்றான். ஆனாலும் அவன் தனது முயற்சியைக் கைவிடாது அதனையே தொடர்ந்து செய்வான்.

மறுநாள் காலையிலே எழுந்து குளித்துவிட்டுப் பரீட்சைக்குச் செல்லக் கபிலன் தயாராகிக் கொண்டிருந்தான். தாய் வேளைக்கு எழுந்து கோயிலுக்குச் சென்று கடவுளிடம் தனது வேண்டுதலைக் கூறிவிட்டு வந்து விட்டாள். தாயிடம் உணவை வாங்கி உண்டு விட்டு கபிலன் பாடசாலைக்குச் சென்றுகொண்டிருந்தான். பரீட்சை மண்டபத்திலே வினாப்பத்திரத்தைப் பார்த்த கபிலனுக்குத் தலை சுற்றியது. அவன் படிக்காத பாடங்களிலே கேள்வி வந்திருந்தது. இருந்தும் அவன் விடைத்தாளிலே சில கவிதைகளை எழுதி வைத்து விட்டான். வினாத்தாள் கணிதம்.. விடைத்தாள் கவிதை. பரீட்சை முடிந்ததுவே என்று அவன் சில நாட்கள் இன்பமாய் இருந்தான். இன்பம் மறைந்து அவனுக்காகத் துன்பம் காத்திருந்தது போல வந்தது. கணித பாடத்திலே அவன் சித்தியடையவில்லை.அந்தப் பாடசலையிலேயே அவன் ஒருவன் மட்டும் தான் இவ்வாறு சித்தியடையத் தவறிய மாணவன். பாடசாலை ஆசிரியர்கள் அவனைத் திட்டித் தீர்த்து இருந்தனர்.

இதனை எல்லாம் விட அவனது அம்மாவிற்கே பெருத்த ஏமாற்றம். அவரது துன்பத்தை வெளியே சொல்ல முடியாமல் உள்ளேயே வைத்து அடக்கிக் கொண்டிருந்தார். கடவுளிடமும் மிகுந்த கோபம் கொண்டிருந்தார். தன் மகனிடம் தவறு இருந்த

போதும் அவனைக் கண்டிக்க இயலவில்லை. அப்போது தான் கபிலனுக்கு தான் எவ்வளவு தூரம் தன் தாயின் ஆசையை ஏமாற்றி விட்டேன் என்பதை உணர்ந்து கொண்டான். இருந்தும் என்ன பயன் எல்லாமே முடிந்து விட்டது. அடுத்த நாளும் மீண்டும் பாடசாலைக்குப் புறப்பட்டான். புறப்படும் போது தாய் மிகுந்த கவலையுடன் இருந்ததை அவனால் உணர்ந்து கொள்ள முடிந்தது. கபிலனுக்கு அந்தப் பாடசாலை பழையதுதான் ஆனாலும் நண்பர்கள் புதியவர்கள். ஏனென்றால் பழைய நண்பர்கள் எல்லாருமே சித்தியடைந்து போய் விட்டார்கள்.

பாடசாலைக்குள் நுழைந்ததுமே அவனுக்குப் பேரதிர்ச்சி காத்திருந்தது. அவன் விடைத்தாளிலே எழுதிய கவிதையைப் பார்த்த ஒரு ஆசிரியர் அதனைப் போட்டிக்கு அனுப்பியிருந்தார். கபிலன் எழுதிய அந்தக் கவிதை போட்டியில் முதல் இடத்தைப் பெற்று பரிசுத் தொகையையும் வென்றிருந்தது.எனவே இதனை முன்னிட்டு கபிலனுக்கு மதிப்பளித்து பரிசுத் தொகையும் வழங்கப்பட்டது.

கபிலன் இந்தச் சந்தோசத்தினை மனம் நொந்து போயிருக்கும் அம்மாவுக்குச் சொல்ல ஓடிப் போனான். போகும் வழியில் ஒரு புடவைக்கடையில் தனது அம்மா ஆசைப்பட்டது போல கிடைத்த பணத்திற்கு ஒரு சேலையையும் வாங்கிக் கொண்டு போனான். வழியிலே அவனது வீட்டிற்கு அருகில் இருக்கும் சின்னையா "என்னடா கபிலன் இப்பத்தான் வர்றியா? நீ பரீட்சையில சித்தி அடையாததால உன் அம்மாவிற்கு இருந்த வருத்தம் கூடிப் போய் இப்பதான் உந்த 'வேலன்' ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போயிருக்கினம்" என்று ஒரு குண்டைத் தூக்கி போட்டு விட்டு சின்னையா நடந்து கொணடிருந்தார்.

கபிலன் தான் வாங்கி வந்த சேலையை ஒரு முறை பார்த்து விட்டு கண்ணீர் சிந்தினான். அவனை அறியாமலேயே அவனது கால்கள் அருகில் இருந்த கோயிலை நோக்கி நகரத் தொடங்கி விட்டன. அநேகமாக அந்தச் சேலை கோயிலிருந்த கடவுளிற்காகத்தான் இருக்கும்……………….

ஆர்.வினோத் 11A
ஹாட்லிக்கல்லூரி.

# சுடர் 3 ன் தொடர்ச்சி......................

# குறளுக்கு ஓர் உரை

அடுத்து வானத்தின் ஆற்றலைப்பற்றி நோக்கினால் வான் சிறப்பு என்ற அதிகாரத்திலே இந்த உலகம் நிலைபெற வானகம் வழங்கும் மழையாகிய அமிழ்தமே காரணம் என்றும் அது இல்லையாயின் உயிர்களைப் பசி வருத்தும் என்றும் உழவர் ஏரான் உழுதலைச் செய்யார் என்றும் ஆக்குவதும் அழிப்பதும் மழையே என்றும் ஆண்டவனுடைய பூசையும் அதுவின்றி நடவாதென்றும் தானமும் தவமும் ஏன் ஒழுக்கமும் கூட இந்த மழையினாலேயே உலகத்தில் நிலைபெற்றுள்ளது என்றால் இவையெல்லாம் வானகத்தின் ஆற்றலல்லவா? இவை எல்லாவற்றிலும் மேலாக வையகம் சூரியனால் வெப்பமடைய வானகம் மழையைப் பெய்து வெப்பத்தைத் தணிக்கின்றது. இந்தத் தணித்தல் என்பதும் வானகத்தின் மிகப்பெரிய ஆற்றலாகும். இனி இந்தக் குறளை வள்ளுவரின் உள்ளம் என்ன கருத்தோடு எழுதியது என்பதைப் பார்ப்போம்.

" செய்யாமற் செய்த உதவிக்கு தனக்கு முன் ஓர் உதவி செய்யாது இருக்க ஒருவன் பிறருக்குச் செய்த உதவிக்கு வையகமும் வானகமும் ஆற்றல் அரிது – மண்ணுலகத்தின் ஆற்றலும் விண்ணுலகத்தின் ஆற்றலும் ஒத்தல் அரிது. ஒத்தல் அரிது என்று சும்மா சொல்லி விட்டால் போதுமா? அதற்குப் போதிய விளக்கம் வேண்டாமா? வள்ளுவர் என்ன சொல்கின்றார் என்பதைப் பார்ப்போம். வையகத்தின் ஆற்றலும் வானகத்தின் ஆற்றலும் இயற்கை ஆற்றல். இது இறைவனால் அளிக்கப்பட்ட ஆற்றல். வையகத்திலே உள்ள சீவராசிகளுக்கு எல்லாம் உணவு வேண்டும் அது வையகத்தில் படைக்கப்படுகின்றது. நீர் வேண்டும் அது வானகத்தால் வழங்கப்படுகின்றது. வையகத்திலிருந்து பெறப்படுகின்றது. கல்லினுள் தேரைக்கும் கருப்பையுள் முட்டைக்கும் ஊட்டி வளர்த்தவன் இறைவன் அல்லவா. இதனால்தான் படைத்தவன் படியளப்பானென்று கூறிவைத்தார்கள். கடவுளுக்கு கடமையுண்டு பொறுப்புண்டு அதனை வையகத்தின்

ஆற்றல் மூலமும் வானகத்தின் ஆற்றல் மூலமும் அதனை ஆற்றினார். இறைவனோடும் இயற்கையோடும் பார்க்கும் போது மனிதன் எம்மாத்திரம். மிக மிக அற்பமானவன் தனக்கென்று உரியவற்றை தன் உறவுக்குள் உள்ளவர்க்கே கொடுக்க விரும்பாதவன். எந்த நேரமும் ஓடி ஓடி உழைக்கவேண்டும் திரட்டவேண்டும் என்ற சிந்தனை உள்ளவன். ஒரு வழி என்ன ஒன்பது வழிகளில் பெருக்கவேண்டும் என்னும் பேரவா கொண்டவன். போதுமென்ற மனமே பொன் செய் மனம் என்பதை புறந்தள்ளியவன். இத்தகையோர் பரந்து வாழும் இவ்வுலகத்திலே இவர்களுக்கெல்லாம் விதிவிலக்கான ஒருவன் தனக்கு முன் பின் தெரியாத பிறத்தியான் ஒருவருக்கு ஏற்பட்ட துன்பத்தின் போது பொருளாலோ உடலாலோ உதவி செய்தானென்றால் அவன் எத்தகைய ஆற்றல் உள்ளவன். அவன் செய்த உதவி எத்தகைய ஆற்றல் மிக்கது. இந்த ஆற்றலுக்கு வையகத்தின் ஆற்றலும் வானகத்தின் ஆற்றலும் ஒத்தல் அரிது என்று உரைத்த வள்ளுவரின் உள்ளத்தை எங்களால் எப்படி உணர்ந்து கொள்ள முடியும்.

ஒருவன் தான் முன்பொரு உதவியும் பெற்றுக்கொள்ளாத நிலையில் அக்கம் பக்கம் அயலில் உள்ள ஒருவருக்கு செய்கின்ற உதவி எதிர்பார்ப்பு இல்லாவிட்டாலும் என்றைக்காவது ஒருநாள் திருப்பி ஏதாவது ஓர் உதவி செய்யவேண்டுமே என்று காலம் காத்திருப்பான். இதனால்தான் பிறத்தியான் என்ற பதத்ததை பரிமேலழகர் உரையில் வலிந்து புகுத்தினார். அதிலேதான் சிறப்பு இருக்கிறது. வேற்று இனம் வேற்றுமொழி, வேற்று மதம், வேற்று நாட்டைச் சார்ந்த ஒரு வழிப்போக்கனைத்தான் இந்த இடத்திலே பிறத்தியான் என்று கருத முடியும். அந்த வழிப்போக்கனுக்கு எதிர்பாராமல் ஏற்பட்ட துன்பத்தின் போது செய்யப்படும் உதவிதான் செய்யாமற் செய்த உதவி. இது ஒரு மிக உயர்ந்த ஆற்றல். இந்த ஆற்றலுக்கு வையகத்தின் ஆற்றலும் வானகத்தின் ஆற்றலும் ஒத்தல் அரிது என்பது எவ்வளவு பொருத்தப்பாடு உள்ளதாக அமைந்துள்ளது. இதை இன்னும் விளக்கினால் ஒரு பெரிய செல்வந்தர்

வெளியீடு : அஞ்சலியகம், நெல்லண்டை, தும்பளை, பருத்தித்துறை

எவரிடத்திலும் ஏதும் வாங்காது தனது செலவிலேயே ஆலயத்திற்கு வரும் அடியவர்களுக்கு அன்னதானம் செய்யும் பணியை செய்வித்துக்கொண்டிருந்தார். எதிர்பாராமல் ஒருநாள் ஏற்பட்ட சுனாமியால் பல இடங்களில் உள்ளவர்கள் உறவை இழந்து உடமையை இழந்து உறையுளும் இழந்த நிலையில் ஒரு கதியுமற்று அகதிகளாக ஒரு பாடசாலையில் தஞ்சம் புகுந்தனர். இதையறிந்து ஒருவர் தன்னிடமிருந்த ஒரேயொரு பெறுமதிமிக்க பொருளை விற்று அதைக் கொண்டு பாடசாலையில் இருந்தவர்களுக்கு உடனடியாக ஒருநாள் உணவை வழங்கினார் என்றால் இவருடைய செய்யாமற் செய்த உதவி என்னும் ஆற்றலுக்கு தினமும் ஆலயம் வருவோருக்கு அன்னதானம் வழங்கியவரின் ஆற்றல் ஒப்புதல் ஆகுமா என்பதை நீங்களே முடிவுசெய்யுங்கள்.

எனவே ஆற்றல் என்பதற்கு கைமாறாகக் கொடுத்தல் எனப் பொருள் கொள்வதானால் எதிர்காலத்தில் திருக்குறளே கைமாறிய பொருளாகப் போனாலும் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. விஞ்ஞான யுகத்திலே வாழும் இன்றைய தலைமுறை எழுப்பும் வினாக்களுக்கு கிடைக்கும் விடைகள் நம்பகத் தன்மை உடையவனவாக அமைதல் வேண்டும். திருக்குறள் வெறும் கற்பனை இலக்கியமன்று யதார்த்தம் நிறைந்த வாழ்விலக்கியம். மனம், வாக்கு, காயத்தின் அனுபவத்தின் பேறாக அமைந்ததே அத்தனை குறள்களும் ஆகும். ஆகவே "எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு"

வாழ்க குறள் வளர்க ஓர் உரை

உசாத்துணை நூல்கள்


1. குமரேச வெண்பா - ஜெகவீர பாண்டியன்
2. திருக்குறள் உரைக்கொத்து - ஸ்ரீமத் முத்துக்குமாரசுவாமித் தம்பிரான்
3. திருவள்ளுவரும் திருக்குறளும் - டாக்டர் ஊ.வே சுவாமிநாத ஐயர்.
4. திருக்குறள் பாட்டும் கருத்தும் - நாமக்கல் கவிஞர்.

5.திருக்குறள் பாட்டும் கருத்தும் - திரு.வி.கலியாணசுந்தரனார்.
6. திருக்குறள் பாட்டும் கருத்தும் - பேராசிரியர் கோ.சங்கரராசன்.
7. திருக்குறள் தெளிவுரை - டாக்டர் மு.வரதராசன்.
8. திருக்குறள் தெளிவுரை - டாக்டர் ம.வி.சுதாகர்
9. திருக்குறள் தெளிவுரை - தி. ஸ்ரீநிவாசன்
10. திருக்குறள் தெளிவான எளிய உரை- இரா.இராசேந்திரம்
11. திருக்குறள் எளிய இனிய உரை -பேரசாரியர் ப.முருகன்.
12. திருக்குறள் பரிமேலழகர் உரை - கழக வெளியீடு.
13. திருக்குறள் குறள் ஓவியம் - கலைஞர் மு.கருணாநிதி.
14. திருக்குறள் மூலமும் உரையும் பேராசிரியர் எம்மார் அடைக்கலசாமி
15. திருக்குறள் புதிய உரை - புலியூர்கேசியகன்.
16. திருக்குறள் புதிய உரை - சுஜாதா.
17. திருக்குறள் வாழ்வியல் உரை- மதுரை இளங்குமரனார்.
18. திருக்குறள் மக்கள் உரை - கு.மோகனராசு.
19. திருக்குறள் உரை - கோணார் பொன்னுத்துரை
20. திருக்குறள் புதைபொருள் - முத்தமிழ் காவலர் கி.ஆ.பெ. விஸ்வநாதன்.
21. சொற்பொருள் விளக்கம் -பிரமஸ்ரீ ச.சுப்பிரமணிய சாஸ்திரி.

செயலாளர்
ஆ. வடிவேலு
அகில இலங்கை வள்ளுவர் கோட்டம்.

**தாயைப் பழித்தால்**
**தாய் தடுத்தால் விடுவேன்.**
**தமிழைப் பழித்தால்**
**யார் தடுத்தாலும் விடேன்!**

**பாரதிதாசன்**

# இயேசு இன்று சிலுவையில் மரிக்கிறார்.



சாவு அன்றாட வாழ்க்கை நிகழ்வு. ஒவ்வொரு நாளும் ஆயிரக்கணக்கான மக்கள் இறக்கின்றார்கள். இறக்கின்ற அனைவரையும் மக்கள் நினைப்பதில்லை. ஒரு சிலரின் இறப்புக்கள் நினைவுகூறப்படுகின்றன. பலருடைய இறப்புக்கள் மறக்கப்படுகின்றன. ஆனால் மனித வரலாற்றில் ஒருவருடைய இறப்பு மட்டும் பலகோடி மக்களால் உலகின் எல்லா நாடுகளிலும் ஒவ்வொருநாளும் நினைவுகூறப்படுகின்றது. அந்த மரணம் மக்களின் விசுவாச உண்மையாக அறிக்கையிடப்படுகின்றது. அப்படியாக நினைவுகூறப்படுகின்ற மரணம் நசரேத்து இயேசுவினுடையதே. இந்த இயேசு கொடிய சாவிற்கு உள்ளாக்கப்படவே இறைவனால் உலகிற்கு அனுப்பப்பட்டார். இயேசுவை யூதர்கள் சிலுவையில் கொடூரமாகக் கொலை செய்தனர். அக்காலத்தில் சிலுவை மரணம் மிகக்பெரிய கொடூர தண்டனையாகும். கள்வர், கொலைஞர், கலகம் செய்வோர், புரட்சிக்காரர் போன்றோருக்கு கொடுக்கப்படும் தண்டனை சிலுவைச் சாவு. இயேசு உலகமக்கள் அனைவரையும் அலகையின் பிடியிலிருந்து விடிவிக்கவும் முழு மனித விடுதலையை மனிதனுக்கு கொடுக்கவுமே இயேசு உலகிற்கு வந்தார். மக்கள் மத்தியில் காணப்பட்ட வேற்றுமைகளை உயர்வு தாழ்வுகளை அகற்றவும் சட்டத்தின் பிடியில் சிக்கி சீரழிந்த மக்களுக்கு விடுதலை கொடுக்கவும் அன்பு, நீதி, இரக்கம், பகிர்தல் போன்ற பண்புகளை வளர்க்கவும், அர்த்தமற்ற ஆசார வழிபாடுகளை வெளிவேடங்களை ஓரம்கட்டி உண்மையிலும் ஆவியிலும் மக்களை வழிபட ஆயத்தம் செய்யவும் இயேசு உலகிற்கு வந்தார்.

இயேசு ஏழைகள் அனாதைகள், விதவைகள், ஒடுக்கப்பட்டோர், வரிதண்டுவோர், பாவிகளென்று தள்ளிவைக்கப்பட்டோர் அனைவரையும் வரவேற்று அவர்களோடு

வெளியீடு : அஞ்சலியகம், நெல்லண்டை, கும்பளை, பருத்தித்துறை

உணவு அருந்தினார். இந்த புதுமையான புரட்சியை சகிக்க முடியாத யூதர்கள் சிறப்பாக பரிசேயர், சதுசேயர் தமது பதவிகளை மதிப்பு மரியாதையை காப்பாற்றிக்கொள்ள இயேசுவைக் கொலை செய்ய முற்பட்டார்கள். எனவே இயேசுவை யூதர்கள் பிடித்து தமது சங்கத்தின் முன் விசாரணைக்கு உட்படுத்தி இயேசுவின் மேல் பொய்க்குற்றம் சாட்டி அவரை அன்று தேசாதிபதியாக இருந்த பிலாத்துவின் முன் நிறுத்தினர். பிலாத்து இயேசுவை விசாரித்தான். அவரிடம் குற்றம் எதுவுமில்லை என்று அறிந்திருந்தார். ஆனால் தனது பதவியைத் தக்கவைத்துக்கொள்ள யேசுவை சாட்டையால் அடித்து சிலுவையில் அறைந்து கொல்லும் படி தீர்ப்புக் கூறினான்.

படைவீரர் இயேசுவை சாட்டையால் அடித்து தலையில் முள்முடி சூட்டி அவரை பரிகாசம் செய்து கல்வாரியில் இயேசுவை ஆணியால் சிலுவையில் அறைந்தார்கள். இயேசு சிலுவையில் மூன்று மணிநேரம் தொங்கி தமது கடைசித் துளி இரத்தத்தையும் உலகம் உய்வதற்காகச் சிந்தி சிலுவையில் தமது உயிரைக் கொடுத்தார். அதனால்தான் இயேசுவின் சாவும் உலகம் உள்ளவரை நினைவுகூறப்படுகின்றது.

இன்று நாம் வாழும் உலகில் பல சமூக ஏற்றத்தாழ்வுகள் நிறைந்துள்ளன. ஆளும் இனம் ஆளப்படும் இனம், பணம் படைத்தவன், அன்றாடம் உணவுக்கு வழியின்றி வாடும் ஏழை, படித்தவன், பாமரன் இப்படிப்பல ஏழை எளியவருக்கு எதிராக இழைக்கப்படும் அநீதிகளும், கொடுமைகளும் ஏட்டில் அடங்கா. அன்று இப்படியாக ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்விற்காக தம் உயிரைக் கையளித்த யேசு இன்றும் அத்தகைய மக்களோடு தம்மை இணைத்துக் கொள்கிறார். அவர்கள் மத்தியில் பிரசன்னமாக இருக்கிறார். இயேசுவின் சிலுவை மரணம் நடந்து முடிந்துவிட்டி நிகழ்ச்சி அல்ல. ஆனால் அன்றாடம் தொடரும் நிகழ்கால நிகழ்ச்சி. யேசுவின் முழுமையான இறையரசு மலரும் வரை இயேசுவின் பாடுகளும், மரணமும் தொடர்ந்து நடந்தவண்ணம் இருக்கும்.

இ.ம.ஜெயசீலன்
மறைப்போதகர்.

# வேண்டுதல்



பெற்றோரை இழந்து – தம்
உற்றோரை இழந்து
உடன் பிறப்பு இழந்து
கூடி வாழ்ந்து குதூகலம் குழையும்
தம் இடம் இழந்து
கஞ்சி குடிக்கும்
கண்ணீர் உப்பிடும்
காலம் மறைய வேண்டும்.
அன்றாட வாழ்வை
அல்லலே நிரப்பும்
அவலங்கள் தொலைய வேண்டும்.
அனாதைகளாய் அகதிகளாய்
அன்புக்காய் ஏங்கும்
நிலை இங்கு மாற வேண்டும்
சிறைகள் அழித்து
கொலைகள் அகற்றி
நின்மதி வாழ்வு நிரந்தரமாக வேண்டும்
விலங்குகள் அறவேண்டும்.
விரைவாய் விடியலிங்கு வரவேண்டும்.

ஆக்கம் - S.J டயானா
2ம் வருடம்
கலைப்பீடம்
யாழ் பல்கலைக்கழகம்.

வெளியீடு : அஞ்சலியகம், நெல்லண்டை, தும்பளை, பருத்தித்துறை

# பெண்மையைப் போற்றுவோம்.

கருவாகி உயிராகி தாயாகி நிற்பவள்
கற்பு அவள் சொத்து கனிவு அவள் உடைமை
பணிவு அவள் அன்னை பண்பு அவள் தந்தை
உடனுள்ள புன்னகை அவள் கொண்ட பொன்னகை

பெண்ணின் பெருமை அது நம் மண்ணின் பெருமை
பெற்றவர் உற்றவர் அயலவர் உணர்ந்திடல் வேண்டும்
பெண்ணை பெண்மையைப் போற்றிடல் வேண்டும்
ஆணொடு சமமாய் பெண்ணைக் கருதிடல் வேண்டும்.

சீதனக் கொடுமையைக் களைந்தெறிய வேண்டும்
பெண்மீது பாலியல் பலாத்காரம் இனி நீங்க வேண்டும்
பெண்ணடிமை பெண்கொடுமை நிலை மாற வேண்டும்
புலியாகிப் பூவையவள் பாய்ந்தெழ வேண்டும்.



பெண்ணே உன் திறமை உலகறிய வேண்டும்
பண்போடு நீ என்றும் வாழ வேண்டும்
சீற்றம் கண்டு நீ சீறி எழ வேண்டும்
சரித்திரம் புரிந்திடு நீ சாதனை செய்திடு

கருத்தோடு உன் அன்னை தந்தையைக் காத்திடு
விருப்போடு கல்வியை என்றும் தொடர்ந்திடு
நெருப்போடு விளையாட பெண்ணே புயலாகிடு
துடிப்போடு பெண்மையை என்றும் நீ போற்றிடு!

ஜென்னி ஞானசோதியன்
நல்லூர்
யாழ்ப்பாணம்.

வெளியீடு : அஞ்சலியகம், நெல்லண்டை, பருத்தித்துறை

# மெல்லச் சிரியுங்கள் . . .

1. ஒரு பெண் தன் தோழியிடம் :- என்னை திருமணம் செய்த முதல் மாதமே எனது கணவர் ஸ்கூட்டர் வாங்கிவிட்டார் என்றார்.

தோழி:- நீ அதிஸ்ரசாலிதான் போ

பெண்:- இல்லை........... இதற்கு முன் அவர் கார் வைத்திருந்தார்.

2. கணவன் :- எனக்கு வர வர ஞாபகமறதி அதிகம் என்றார்

மனைவி :- நீங்கள் வேட்டிக்குப் பதிலாக பாவாடை கட்டியிருக்கிறதிலிருந்தே தெரியுது.

3. மறைக்கல்வி ஆசிரியர்:- நன்றாக முதல் நன்மை வகுப்பிற்கு படிப்பித்தபின்னர் கேட்டார் ஒரு மாணவனிடம் நற்கருணையில் யார் இருக்கிறார் என்று

மாணவன்:- எங்கட அப்பா என்றான்.

ஆசிரியர்:- மாணவனுக்கு அடித்துவிட்டு அப்பாவை கூட்டிக்கொண்டு வரச்சொன்னார்.

ஆசிரியர்:- அப்பாவிடம் உங்கள் மகன் நற்கருணையில் நீங்கள் இருக்கின்றீர்கள் என்று சொல்கின்றான் என்றார்.

அப்பா:- மகனுக்கு அடித்துவிட்டுச் சொன்னார். உனக்கு எத்தனை தடைவ சொல்லித்தாறது நற்கருணையில் அப்பாவா இருக்கிறன். அந்தோனியாரெல்லோ இருக்கிறார் என்றார்.

4. (ஓர் ஊரில் ஒரு சிறுவன் இருந்தான் அவன் மிகவும் கெட்டிக்காரன் எந்த வினாக்களுக்கும் சாமர்த்தியமாகப் பதிலளித்துவிடுவான். அவனுடன் ஆயர்)

ஆயர்:- அச் சிறுவனிடம் தம்பி கடவுள் எங்கிருக்கிறார் என்று நீ சொன்னால் நான் உனக்கு ஒரு ஒரேஞ்பழம் தருவேன் என்றார்.

வெளியீடு : அஞ்சலியகம், நெல்லண்டை, தும்பளை, பருத்தித்துறை

சிறுவன்:- My Lord, கடவுள் எங்கு இல்லையென்று நீங்கள் சொன்னீர்கள் என்றால் நான் உங்களுக்கு இரண்டு ஒரேஞ்பழம் தருவேன் என்றார்.

5. முதலாளி:- தன் வேலைக்காரனிடம் வெளியில் உள்ள பூந்தோட்டத்திற்கு தண்ணீர் ஊற்று என்றார்.
   வேலைக்காரன்:- வெளியால மழைபெய்யிது என்றான்.
   முதலாளி:- குடையைப் பிடித்துக்கொண்டுபோய் தண்ணீர் ஊற்று என்றார்.

6. ஆசிரியர்:- மனித இதயத்தைப்பற்றி நன்றாகப் படிப்பித்த பின்னர் ராமுவை எழுப்பி உன்ர இதயம் எங்கிருக்கின்றது என்று கேட்டார்.
   ராமு:- அந்த 3வது வாங்கிலில இருக்கிற கமலாவிடம் இருக்கிறது என்றான்.

இ.விமல்ராஜ்.
கொழும்புத்துறை.

**ஏழைகளைச் சந்தியுங்கள்**
**இயேசுவைச் சந்திக்க**
**எளிதான வழி இல்லை**

வெளியீடு : அஞ்சலியகம், நெல்லண்டை, தம்பனை, பலகத்துறை

# என் பாட்டில் நான்..

எனக்கென்றோர் உலகம் - அதில்
என்பாட்டில் நான்!
இதமான நினைவுகள்......
சுகமான கனவுகள்
கனவோடு கலைந்துபோகும் சில கற்பனைகள்
நிஜமாகி நிமிர்ந்து நிற்கும் சில அற்புதங்கள்
எல்லாம் கடந்து கொண்டு!
என்பாட்டில் நான்

வேதனையின் போது!
விழிநீரில் நனையும் கன்னங்கள்
என் கண்ணீர் துடைக்க ஆயிரம் கரங்கள்
மீண்டும் கவலைமறந்த கலகலப்பு
வாழ்வின் நுணுக்கங்களை ரசித்தபடியே
என்பாட்டில் நான்!

இறைவன் படைப்பில் குறையேதும் இல்லை
அன்னை வளர்ப்பில் பிழையேதும் இல்லை
இருந்துவிட்டுப் போகிறேன்
இறக்கும் வரை இப்படியே
என்பாட்டில் நான்!



தி. சிவதர்சினி
H.N.D.A
2ம் வருடம்
யாழ் உயர் தொழில்நுட்பக் கல்லூரி.

வெளியீடு : அஞ்சலியகம், நெல்லண்டை, தும்பளை, பருத்தித்துறை

# கணினி சார்புடைய சுருக்க பெயர்களும் விரிவான விளக்கங்களும்

CPU :- Control Processing Unit Central Processing
CU :- Control Unit Unit.
ALU :- Arithmetic and Logical Unit.
CRT :- Cathode Ray Tube.
LCD :- Liquid Crystal Display.
CD :- Compact Disk.
DVD :- Digital Versatile Disk / Digital Video Disk
USB :- Universal Serial Bus.
UPS :- Unit Power Supply.
VGA :- Visual Graphical Adapter.
GUI :- Graphical User Interface.
RAM :- Random Access Memory.
ROM :- Read Only Memory.
BIOS :- Basic Input Output System.
HDD :- Hard Disk Drive.
FDD :- Floppy Disk Drive.
SPK :- Speacker.
ATX :- Advance Teachnology Xperiance.
IDE :- Intergrated Device of Electronic.
VDU :- Visual Display Unit.
ASCII :- American Standard Code of Informatin Interchange.
LSI :- Large Scale Intergretion.
VLSI :- Very Large Scale Intergration.
LAN :- Local Area Network.
MAN :- Metropol Area Network.
WAN :- Wide Area Network.
SIMM :- Single Inline Memory module.
DIMM :- Dual Inline Memory Module.

Thanks : K. Thiva - Jeswin & Point City Computer Institute

வெளியீடு : அஞ்சலியகம், பிரான்பற்று, சில்லாலை, பண்டத்தரிப்பு

# ஆபத்து விளிம்பிலுள்ள கற்போர்.
## AT-RISK LEARNERS.

சுடர் 3ன் தொடர்ச்சி........................

நடத்தைப் பிறழ்வு கொண்டவர்களிடம் அதிக அங்கலாய்ப்புத் தொழிற்பாடு காணப்படும். அந்த வகையில் பின்வருவன அடங்கும்.

- கைகால் அமைதியற்ற நிலையில் இருத்தல்.
- இருக்கையில் நெளிந்து நிம்மதியின்றி இருத்தல்.
- வகுப்பில் இருந்து அடிக்கடி வெளியில் செல்லுதல்.
- அதீத உணர்ச்சி வசப்படும் செயற்பாடுகளைக் கொண்டிருத்தல்.
- அதீதமாகப் பேசி அமைதியாக இருக்க முடியாது தவித்தல்.
- அவசரப்பட்டு பொருத்தமில்லாது விடைஅளித்தல்.

தொடர்பாடற் குறைபாடு உடையோரும் முக்கியமாக ஆபத்து விளிம்பில் உள்ளோராவர். கட்புல, செவிப்புல குறைபாடுகள் பேச்சுக் குறைபாடு கொண்டோர் இப்பிரிவில் அடங்குவர்.

மொழிவவழித் தொடர்பாடலே இன்றைய கற்றல் கற்பித்தற் செயற்பாடுகளில் அதிக முக்கியத்துவம் பெறுவதால், தொடர்பாடல் ஆற்றல் குறைந்தவர்கள் மீது சிறப்பார்ந்த கவனம் செலுத்தவேண்டியுள்ளது.

வறுமை காரணமாக ஏற்படும் உணவு, ஊட்டக்குறைவு மூளை வளர்ச்சியைப் பாதிக்கிறது. புலன் உறுப்புக்களின் செயற்பாடுகளைப் பாதிக்கிறது. இந்நிலைகளில் இருந்து பிள்ளைகளை மீட்டெடுப்பது அவசியத் தேவையாகும்.

பால்வகை வேறுபாட்டின் காரணமாகவும் ஆபத்து விளிம்புக்குத் தள்ளப்படும் கற்போரும் இருக்கிறார்கள்.

மேற்கூறப்பட்ட வகையில் உடல், உள, சமூக மனவெழுச்சிகளால் பாதிக்கப்பட்டு இயல்பான சமநிலைக்கு மாறாக தளம்பிக் கொண்டிருக்கும் மாணவச் செல்வங்களை இனங்காணல் அவசிய கடமையும் காலத்தின் தேவையும் ஆகும்.

வெளியீடு : அஞ்சலியகம், நெல்லண்டை, தும்பளை, பருத்தித்துறை

ஆபத்து விளிம்பில் உள்ள மாணவர்கள் மீதி அதீத அழுத்தங்கள், தீவிர கட்டுப்பாடுகள், மிகையான திணிப்புக்கள் மேற்கொள்வதை ஆசிரியர்கள் இயன்றளவு குறைத்துக் கொள்ளல் சிறந்தது. தம்மீது ஆதரவும் அன்பும் தரப்படுகிறது என்பதை அவர்கள் ஆழ்ந்து உணர்ந்து கொள்ளக்கூடியவாறு ஆசிரியர்கள் இங்கிதமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். கண்டிப்புக்கள் தவறான நடத்தைகள் என்பவற்றைத் தவிர்த்து நிதானமான நெகிழ்சிசியான அணுகுமுறைகளை மேற்கொள்ள வேண்டும். மாணவர்களின் தெரிவுகளுக்கும் விருப்பங்களிற்கும் முன்னுரிமை அளித்தல் வேண்டும். நிதானத்தையும் தன்னம்பிக்கையையும் வளர்க்கவேண்டும். தாழ்வுச் சிக்கலைத் தவிர்க்கக் கூடிய உற்சாகமான கற்பித்தலைப் பிரயோகிக்கவேண்டும். தலைமைப் பொறுப்புக்களை வழங்கி துணிவையும் எழுச்சியையும் ஏற்படுத்தல் இவ்வாறான பல தள ஊக்கல் முயற்சிகளை முன்னெடுப்பதன் வாயிலாக ஆபத்து விளிம்பில் உள்ள கற்போரை மீட்டெடுக்க முடியும்.

நன்றி

## உசாத்துணை நூல்கள்.

பேராசிரியர் சபா. ஜெயராசா
ஆபத்து விளிம்பிலுள்ள கற்போர்.. பா.தனபாலன்
படி. (ஆசிரியர்தின வெளியீடு)
கலாசுரபி (யா/தேசிய கல்வியற்கல்லூரி வெளியீடு)

க.சிவகுமார் (ஆசிரியர்)
யா/குடத்தனை .அ.மி.த.க.பாடசாலை

# Freshwater Birds

Freshwater lakes, ponds, and river attract a huge veriety of birds. There is plenty of food for them to eat, and many also nest and shelter on the banks. Some fresh water birds, such as flamingos and herons, have long legs and necks and specidly shaped food as they wade in the water. Birds such as ducks, geese and swans have webbed feet the push them through the water.

# Seabirds

Al batrosses and gannets are some of many birds that depend on the sea for food .Like most seabirds, there are strong fliers and can soar for hours over the open sea, searching for fish. In fact, some sea birds only come to land to lay eggs and rear young. Most sea birds swim well, Some dive under the water to chase their prey.


ஜெஸ்வின் அன்ட் பருத்திநகர் கணினிப் பயிற்சியகம்

2ம் குறுக்குத்தெரு

பருத்தித்துறை

நாமும் தகவல் தொழில் நுட்பத்தில் பங்காளிகள்
என்ற நோக்கில் அனைவருக்கும் திட்ட
அடிப்படையில் இலவசப் பயிற்சி நெறிகளை கிராம
சேவகர் பிரிவுகளின் ஊடாக நடாத்தி வருகின்றது.
அனைவரும் தகவல் தொழில் நுட்பத்தில் நுழைந்து
எதிர்கால சமுதாயம் வளம்பெற பாடுபடுங்கள்.
இணையும் ஒவ்வொருவருக்கும் பயன் அதிகம்
இணைந்து கணினிக் கல்வியினை
மேற்கொள்ளுங்கள்.


வெளியீடு : அஞ்சலியகம், நெல்லண்டை, தும்பளை, பருத்தித்துறை

# உளமதில் ஒளி நிறைந்தது

பருத்தித்துறை நெல்லண்டை அஞ்சலியகத்தில் அஞ்சலியகசிறுவர்கழகத்தினர்,இளையோர்கழகத்தினர், அன்னையர்கள், பணியாளர்கள், அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், அருட்சகோதரர்கள், அருட்சகோதரிகள், போரினால் பாதிக்கப்பட்ட குடும்பத்தினர், ஆசிரியர்கள, அதிபர்கள், அரச அரசசார்பற்ற ஊழியர்கள் அணைவரும் இணைந்து அஞ்சலி குடும்பமாக ஒளிவிழா, தைத்திருநாள், மகளீர்தினம் போன்ற நிகழ்வுகளை வெகு சிறப்பாக கொண்டாடினர்.

இனிய கலைநிகழ்வுகள் நடைபெற்றதோடு ஒளிவிழாவின் போது அமைதியின் கீற்றாய் ஒளியேற்றி தைத்திருநாளின் போது பொங்கல் பொங்கி உண்டு மகிழ்ந்து மகளீர்தினத்தின் போது பெண்மையின் விலங்கு உடைக்கும் நிகழ்வு சித்தரிக்கப்பட்டதுடன் சிற்றுண்டிகள் பரிமாறியும் மதியபோசனங்கள் வழங்கியும் மகிழ்வுடன் கொண்டாடப்பட்டது.

இதே போல் எதிர்வரும் 01.06.2008 அன்று அஞ்சலி அகத்தின் இரண்டாவது ஆண்டு நிறைவு விழாவை மகிழ்வுடன் கொண்டாட அஞ்சலிக்குடும்பம் தயாராகிக் கொண்டிருக்கிறது.

## எழுதுங்கள் வாசகர்களே!

இந்த அஞ்சலி என்ற சஞ்சிகை உங்களை வளர்ப்பதற்காகவே பிரசவிக்கப்பட்டுள்ளது. எனவே உங்கள் ஆக்கங்களை ஆடி 15ஆந் திகதிக்கு முன்பதாக எங்களுக்கு எழுதி அனுப்புங்கள். உங்கள் ஆற்றல் திறன்களை வெளிக்கொணர்ந்து பேனாவிற்கு வேலை கொடுங்கள். உங்கள் பேனாவில் உள்ள ஒளி உங்கள் அக இருளையும் இவ் உலகின் இருளையும் அகற்றட்டும்.

ஆசிரியர்

# புதுயுகம் படைப்போம்

"மங்கையராய்ப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டும் என்று பெண்ணின் பிறப்பையே பெரும் பேறாகக் கருதிப்பாடினார் கவிமணி தேசிய வினாயகம் பிள்ளை. தனி மனித வாழ்விலும் சரி, சமூகத்து வாழ்விலும் சரி பெண்ணின் பங்கு மகத்துவமானதாகும். பெண்ணை அன்பின் சின்னமாகவும் அறத்தின் வடிவாகவும் தியாகத்தின் உருவாகவும் கருதினர். எமது சமயங்கள் யாவும் பெண்ணை சக்தியின் வடிவாகப் போற்றியது. முற்காலத்தில் தமிழ் மக்கள் தமது வாழ்வில் மகளிருக்கு தனி இடம் அளித்துள்ளனர் என்பது சங்க நூல்களிலிருந்து தெரிய வருகின்றது. வாழ்க்கைத் துணைவியாகவும் வாழவைக்கும் தாயாகவும் எம்மை வழிநடத்திச் செல்லும் பெண்ணுக்கு இணையாக எதனையுமே கூறமுடியாது. இதனால்தான் பெண்ணுக்கு இலக்கணம் கூறிய வள்ளுவர்

"தற்காத்து தற்கொண்டார் பேணி தகைசான்ற
சொற்காத்து சோர்விலாள் பெண்" எனக் கூறுகின்றார்.

ஒவ்வொரு ஆணின் வெற்றியின் பின்னாலும் ஒரு பெண் இருக்கின்றாள் என்றார் ஒரு அறிஞர். தொட்டிலை ஆட்டும் கை தொல்லுலகை ஆளும்கை என்பதை யாரும் மறந்துவிடக்கூடாது. எனவே ஆண்களின் முன்னேற்றத்திற்கு அஸ்திவாரமிடுவதும் நல்லதோர் சமுதாயத்தை உருவாக்குவதும் அவர்களின் கையிலேதான் தங்கியுள்ளது. என்பதை யாரும் மறக்கமுடியாது. இருபதாம் நூற்றாண்டில் புதுமைக்கு வித்திட்ட பாரதி

"நிலத்தின் தன்மை பயிர்க்குளதாகுமாம்
நீசத் தொண்டும் மடமையும் கொண்டதாய்
சலத்தில் மாண்புடை மக்களை பெற்றிடல்
சாலவே யரிதாவதோர் செய்தியாம்" என்றார்.

வெளியீடு : அஞ்சலியகம், நெல்லண்டை, தும்பளை, பருத்தித்துறை

ஆணும் பெண்ணும் நிகரெனக் கொண்டதாலேயே அறிவில் ஓங்கி இவ் வையம் தழைத்தது. அக்காலத்தில் பெண்கள் மதிக்கப்பட்டார்கள். தமிழ் கூறும் நல்லுலகில் மட்டுமன்றி ஏனைய நாடுகளில் கூட நங்கையர்கள் தலைநிமிர்ந்து தனிச் சிறப்புடன் வாழ்ந்து தரணிக்கும் தமக்கும் புகழ் தேடினர். ரேடியத்தைக் கண்டிபிடித்து நோமல் பரிசுபெற்ற மெடம் கியூரி, தாதி தொழிலுக்கே தன்னை அர்ப்பணித்த புளோறன்ஸ் நைற்றிங் கேல், அன்பின் இலக்கணமான அன்னை திரேசா, வீரத்தின் விளைநிலமான வீரமங்கை ஜோன் இவ்வாறு பட்டியல் நீண்டுகொண்டே செல்கின்றது.

இத்தகைய சிறப்புப் பெற்ற பெண்களை இழிவுபடுத்தும் வேத விதிகள், சமூக மதக் கொள்கை யாவும் இடைக்காலத்திலேயே புகுந்தது. இதன் விளைவாக போற்றிப் பேணப்பட்ட பெண்மை தாழ்வுற்றது. வீட்டுக்குள்ளே பெண் பூட்டப்பட்டாள். ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையாயிற்று. எனினும் இன்றைய உலக சனத்தொகையில் பெரும் பங்கினர் பெண்களாகவே உள்ளனர். பெண்ணானவள் பெரும்பான்மையினராக காணப்படுகின்ற போதும் பெண்களுக்கெதிரான வன்முறைகள் பெண்கள் மத்தியிலும் ஒட்டு மொத்த சமூதாயத்திலும் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இந்த நாட்டைப் பொறுத்தவரை பெண் என்பவள் ஏன் என்று கேட்கத் தெரியாத எடுபிடி வேலையாள், பிள்ளை பெற்றுத்தரும் இயந்திரம், ஓய்வெடுக்காத, சம்பளமில்லாத வேலைக்காரி, அடுப்பே திருப்பதி, வாசலே வைகுண்டம் இவ்வாறாகவே ஆணாதிக்க சமுதாயத்தில் பெண் நோக்கப்படுகிறாள்.

சக்தியின்றி சிவனில்லை அதாவது பெண்மையின்றி எந்த அணுவும் அசையாது. என்று ஆண் வர்க்கம் உணர்ந்திருந்தும் குணமிழந்து மணமிழந்து அடுக்களைப் பெண்களாய் அறிவிலிகளாய் வாழ்வதே அன்னவர்க்குப் பெருமையென நினைத்து அவளை சாக்கடைக்குள் தள்ளிவிடுவதிலேயே குறியாக உள்ளனர். இதனால்தான் பெண் தன் பிறப்பையே

“என்விதி அப்போதே தெரிந்திருந்தாலே
கர்ப்பத்தில் நானே கலைந்திருப்பேனே”

வெளியீடு : அஞ்சலியகம், நெல்லண்டை, கும்பளை, பருத்தித்துறை

என்று தன் பிறப்பையே எண்ணி நோகிறாள். குழந்தை வளர்ப்பிலும் ஆண்பெண் என்ற வேறுபாடு காணப்படுகிறது. பெண் என்பவள் ஆணுக்குப் பணிந்து நடக்கவேண்டுமென்ற சம்பிரதாயம் அவள் பராயம் அடையும் முன்னரே அவள் மனதில் தீயாக விதைக்கப்படுகிறது. அவள் பிறந்தது தொட்டு இறக்கும் வரை தந்தை, தமயன், கணவன் என்று ஆண்வர்க்கத்திற்கு அடங்கி நடக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குள்ளாக்கப்படுகிறாள்.

அடுத்ததாக எமது சமுதாயத்தில் அன்று முதல் இன்றுவரை மிக உன்னத நிலையில் வைத்துப் போற்றப்படுவது கற்பாகும். இக் கற்பு என்பது ஆண்பெண் இருபாலாருக்கும் பொதுவான ஒரு விடயமாகும் ஆனால் நமது இதிகாசங்கள், புராணங்கள் யாவும் கற்பு என்பதை பெண்ணுக்கு வலியுறுத்திய அளவு ஆணுக்கு வலியுறுத்தவில்லை. ஆணானவன் இரண்டாம் தாரமாகத் திருமணம் செய்யும்போதுகூட அவனது கற்பு விமர்சிக்கப்படுவதில்லை. பெண்ணானவள சிறு தவறைச் செய்யும்போது அவளது கற்பு விமர்சிக்கப்படுகிறது. ஆனால் பாரதியார்

"கற்பு நிலையென்று சொல்ல வந்தார்
இருகட்சிக்கும் அதனைப் பொதுவில் வைப்போம்"

என்று ஆண் பெண் இருபாலாருக்குமே கற்பு பொதுவானதென்று கூறுகின்றார்.

எமது தமிழ் சமுதாயத்தில் வேரூன்றி திருமணத்தின் போது பெண்ணுக்கு சீர்வரிசை செய்யவேண்டுமென்பதாகும். இச் சீர்வரிசை செய்யவேண்டுமென்பதால் இல்லாத எத்தனையோ பெண்களின் வாழ்வு மலராத மொட்டுக்களாய் காணப்படுகிறது. இத்தன்மையை

"பூமியை விட்டு நாங்கள்
சந்திரனில் வாழச் சென்றால்
சூரியனையும் சந்திரனையும்
சீதனமாகக் கேட்பீரோ" என்று நிருபாவின் வந்தனங்கள்

எனும் கவிதை சீதனம் வாங்கி திருமணம் செய்யும் ஆண் மகனை ஏளனம் செய்கிறது.

பெண்களை தாயாய், தெய்வமாய் பல வடிவில் கண்டு மகிழும் அதே நாட்டில் அவர்களுடைய திருமணம் என்பதை ஒரு அறிஞர்

“இங்கே அஷ்ரலக்சுமிகளுக்கு ஆராதனை ஆனால்
நவரத்தினங்கள் எடைபோட்டுத்தான் நங்கைக்கு
மணமாலை” என்று மிக அழகாக இன்றைய நிலையைப் புலப்படுத்துகின்றார்.

வேலைக்குச் செல்லும் பெண்களின் நியைானது பெண்கள் ஆற்றல் குறைந்தவர்களென்று அவர்களது உழைப்பிற்கேற்ப ஊதியம் வழங்கப்படுவதில்லை. அவர்கள் வேலைத்தளத்திலும் வெளியிடத்திலும் ஒரு காட்சிப் பொருளாகவும் பாலியல் உணர்வை தீர்த்துவைக்கும் ஒரு பண்டமுகமாகவே கருதப்படுகிறாள். இன்று வளர்ச்சியடைந்த காலப்பகுதியிலும்கூட இந்த அடிமைத்தனம் மாறாத நிலை காணப்படுகின்றது. இந்நிலமையை “எமது சமூகம் மாறவேயில்லை” என்ற சங்கரியின் கவிதை மிகத் தத்ரூபமாகப் புலப்படுத்துகிறது.

“எனக்கு முகம் இல்லை
இதயம் இல்லை
ஆத்மாவும் இல்லை
அவர்களின் பார்வையில்
இரண்டு மார்புகள்
நீண்ட கூந்தல்
சிறிய இடை
பருத்த தொடை” என்று பெண்ணானவள் ஒரு போகப் பொருளாகவே கருதப்படுகிறாள்.

இதனைவிட அண்மைய பத்திரிகைச் செய்தித்தரவுகளில் சகல நாடுகளிலுமே தீர்மானம் மேற்கொள்ளும் செயல்முறையில் பெண்களின் பங்கு மிகவும் குறைவு. அத்துடன் பெண்களின் சேவை குறைத்து மதிப்பிடப்படுகிறது. பாடசாலைக்குச் செல்லாத பத்துக்கோடிக்கும் அதிகமான சிறுவர்களில் பெரும்பான்மையினர் பெண்கள், உலகில் எழுத வாசிக்கத்தெரியாத எண்பது கோடிக்கும் அதிகமானவர்களில் பெரும்பாண்மையினர் பெண்கள். இத்தரவுகள் யாவும் எதைச்சுட்டிக்காட்டுகின்றன என்றால் பெண்களின்

உரிமைகள்கூட ஆணாதிக்க சமூகத்தால் மீறப்படுகிறது. இவர்களுக்கெதிரான வன்முறைகள் சகல கட்டங்களிலும், சகல நாடுகளிலும், அனைத்து சமூகத்திலும் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

பெண்மை என்னும் போர்வைக்குள் அடைக்கப்பட்டுக்கிடக்கும் பெண்ணை புதுமைப்பெண்ணாக உருவாக்க தனியார் மட்டுமன்றி அரசும் பல்வேறு மகாநாடுகள் விழிப்புணர்வு கருத்தரங்குகள், சட்டங்கள் போன்றவற்றை இயற்றி ஆணாதிக்க சமுதாயத்திற்கு எதிராக குரல் கொடுத்து வருகின்றது. பெண்களுக்கெதிராக நடக்கும் வன்முறைகள், கடத்தல்கள், பாலியல்துஸ்பிரயோகம் போன்றவற்றுக்கெதிராக சட்டங்கள் தயாரிக்கப்பட்டு வெறும் எழுத்துருவில் மட்டுமே காணப்படுகிறது. அதற்கு உயிரோட்டம் என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

ஆனால் காலத்திற்கு காலம் பெண்களுடைய முக்கியத்துவத்தை உலகெங்கும் பரப்பவும் அவர்களுடைய உரிமையை வழங்கி அவர்களுடைய அந்தஸ்தைப் பெற்றுக்கொடுப்பதற்கும் பெண்களுடைய திறமைகள் ஆற்றல், சேவைகள் என்பவற்றை வெளிச்சத்திற்குக் கொண்டுவரும் நோக்கிலேயே சர்வதேச மகளிர்தினம் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் மாதம் எட்டாம் திகதி கொண்டாடப்படுகிறது. இவ்வாறான மகளிர் தினம் கொண்டாடப்படுவது ஆண் சமுதாயத்தினிடையே பெண்கள் தொடர்பான விளிப்புணர்வை உண்டாக்குவதற்காகும். பெண்களுக்கெதிரான வன்முறைகள் பெண் அடிமைத்தனம் என்பவற்றை நீக்கி பெண்கள் புதுவாழ்வு வாழ அரசும் தனியாரும் பல்வேறு முயற்சிகளில் ஈடுபடுகின்றனர். பெண்களின் பிரச்சனைகளைத் தீர்க்க 1983ம் ஆண்டு அரசு மகளிர் அமைச்சை நிறுவியது. இதனைவிட பெண்களுக்குச் சார்பாக சர்வதேச மகாநாடுகள் நடைபெற்று வருகின்றது.

இவ்வாறு மகாநாடுகள் நடைபெற்றாலும் ஒவொரு மனித உள்ளமும் பெண்களே நாட்டின் கண்கள். அவளே மனித வாழ்வின் மனைவியாகவும், தாயாகவும், சகோதரியாகவும்

உருப்பெற்று பல வாழ்வியல் கடமைக்கு துணைசெய்கிறாள் என்று எண்ணவேண்டும். அவளது ஆசைகள் அபிலாசைகள் என்பன சமுதாய மனங்களால் மதிக்கப்பட வேண்டும் அப்போதான் பெண்களின் வாழ்வில் ஒளியேற்றப்ப்டும். பெண்கள் விடியலை நோக்கிப் பயணித்து புதுயுகம் படைப்பதற்கு பெண்ணுக்குப் பெண்ணே எதிரியென்ற நிலை மாறவேண்டும். பெண்ணுக்கான கல்வியென்பது நூற்றுக்கு நூறு வீதம் வழங்கப்படவேண்டும். கல்விகற்ற பெண்கள் உழைப்பதற்கு முன்வரவேண்டும் பொருளாதார சுதந்திரம், சமத்துவம் சம அந்தஸ்து வழங்கப்படவேண்டும். விதவை மலடி என்ற சொற்பிரயோகம் அகராதியிலிருந்து அகற்றப்பட வேண்டும். சின்னத்திரையிலும், பெரியதிரையிலும் பெண் என்பவள் மிகவும் பலவீனமானவளாகவும், உடலால் மட்டுமே உழைக்கக்கூடிய உணர்வற்ற ஒரு பொருளாக சித்தரிக்கப்படுகிறாள். இந்நிலைமாறி பெண்ணை இழிவுபடுத்துவதை நுகர்பொருளாக்கி மகிழ்வதையும் நிறுத்திவிட வேண்டும். அத்தோடு ஆண்பெண் இருவரும் ஒருவரை ஒருவர் புரிந்து அன்புசெலுத்தி ஆதிக்கத்துக்கு உட்படாமல் பரஸ்பரத்துடனும் புரிந்துணர்வுடனும் வாழும்போதே பூரண சமத்துவம் சமுதாயம் மலரும். ஒரு ஊனம் இல்லாத சமுதாயம் மலர பெண்ணியம், பெண் விடுதலை என்பன பேணப்படவேண்டும்.

21ம் நூற்றாண்டில் வாழ்ந்துகொண்டிருக்கும் நாம் இனி வரும் காலத்திலும் அல்லற்பட்டு ஆற்றாது கண்ணீர் வடித்து இருளுக்குள்ளே இடிந்த உள்ளங்களுடனும், உள்ளுக்குள் உடைந்த ஆசைகளுடனும் இருந்துவிடக்கூடாது. எம்மை அடிமையாக்கி எமது உணர்வுகளுக்கு மதிப்பளிக்காது நடக்கும் வன்முறை இனியும் வேண்டாம் மலர்ந்த பூக்களின் நல்வாழ்வுக்காகவும், மலராத பெண் மொட்டுக்களின் நல்வாழ்வுக்காகவும் எமது குரல்களை ஒன்றிணைத்து கரங்களை யாரும் அசைக்காத வண்ணம் குரல் கொடுப்போம். பூரண சமத்துவ சமுதாயத்தை நோக்கி புறப்பட்டு புதுவாழ்வு வாழ்வோம்.

"பெண்மை வாழ்கவென்று கூத்திடுவோமடா
பெண்மை வெல்கவென்று கூத்திடுவோமடா
வலிமை சேர்ப்பது தாய்முலைப்பாலடா
கலியழிப்பது பெண்க ளறமடா
உயிரைக் காக்கும் உயிரினை சேத்திடும்
உயிரினும் இந்தப் பெண்மையினிதடா"

இ.உமா
2ம் வருடம்
கலைப்பீட்
யாழ்பல்கலைக்கழகம்

வெளியீடு : அஞ்சலியகம், நெல்லண்டை, தும்பளை, பருத்தித்துறை

வெளியீடு : அஞ்சலியகம், நெல்லண்டை, கும்பளை, பருத்தித்துறை

## சிந்திக்க சில வரிகள்.....................

ஏ கனாக்காறனே!
சேமித்து வை அவமானங்களை
செலவு செய் சோர்வுகளை
திரும்பப் படி தவறுகளை.

திட்டமிடு
திட்டமிடா உழைப்பு
பாலைவனத்தில்
ஆழ்குழாய்த் திட்டம்

விழித்திரு!
நீண்ட உறக்கம்
என்றுமே இறக்கம்

உழைத்து உருகு
உருகும் மேகமே மழை
உருகா மேகம் புகை

நிழலைத் தேடாதே
உன் நிழலில் ஒரு
ஊரையே நிற்க வை

முட்களில் மோதிக் கிழியாதவனுக்கு
பூக்களைத் தடவும் தகுதி கிடையாது.

கோபங்களையும் தீப்பந்தங்களையும்
கொழித்தி வை.

துயரங்களைத்
தூக்கித் தூக்கி எறி.

மகிழ்ச்சியாய் சிரி
கவலைகளையும் பிய்த்து
காற்று மண்டலத்துக்கு
அப்பால் வீசு.

வெற்றி ஒரு சக்கரம்
அது சுற்றிக்கொண்டே இருக்கும்
அது உன் தலைக்கும்
வந்தேதான் தீரும்.

தொகுப்பு : A. கலைவாணி
A/L 2008 (கலைப்பிரிவு)
யாழ்/வட இந்து மகளிர் கல்லூரி.

# ஆசையில் ஓரினம்.

நாடு விட்டு நாடு ஆடவர் பணம் தேட ஓடுவார்.
கேடு கெட்ட பெண்ணையும் வீடு போய்த் தேடுவார்
அழகிய பூக்களையும் அழகென்று வாடுவார்
நரை விழுந்த கிழவியுடன் மறையெழுதக் கூடுவர்
கடும் பசி என்று வந்தால் ருசி அறியாதோ வாய்கள்
காமன் .புயல் வீசினால் பார்வை இல்லையோ விழிகள்
ஏக்கம் கொண்டு அலையும் வயது நாற்பதிலும் தாய்கள்
இலது கண்டால் விடுமா காமப் பசி கொண்ட நாய்கள்

அன்பு மனைவியை நினைத்து வாழ்பவரும் உள்ளவர்கள்
நித்தம் இரவு பகலும் கண்ணீர் விடும் அந்த நல்லவர்கள்
இங்கு உள்ள பலரில் சிலர் உள்ளார் கெட்டவர்கள்
அங்குள்ள துணைவியரும் எல்லோரும் இல்லையே நல்லவர்கள்.
எங்கிரவு பார்த்தாலும் பால் பானைகள்
காவல் இல்லையே விடுமா என ஏங்கும் பூனைகள்.

அல்வையூர் S.P.வைகுந்தன்
மகாத்மா வீதி,
அல்வாய் வடக்கு
அல்வாய்.

வெளியீடு : அஞ்சலியகம், நெல்லண்டை, தும்பளை, பருத்தித்துறை

# அஞ்சலியே



அஞ்சலியே – எம்மை
அதிரவைத்துவிட்டாய் - உன்சஞ்சிகையால்
அசைய தொடங்கி விட்டோம்
ஆலமர விழுதுகளாய்

குடலை கூட அளவிடமுடியும்
கடவுளின் அன்பை அளவிட முடியாது
கல்லாய் மானிடர் மனதை
கனியவைத்துவிட்டாய் கணப்பொழுதில்

வீட்டு விளக்காய் முடக்கி வாழும் மக்களை
வீதி விளக்காய் ஏற்றி வைத்து விட்டாய்
வீராப்புடன் நாம் வாழ
விண்ணுலகில் உதித்துவிடு தினமும்

அவனின்றி ஓர் அணுவும் அசையாதே
அஞ்சலியின்றி ஓர் பேனா கூட அசையாதே
உம்மால் தானே என் பேனாகூட
அசைந்தது அஞ்சலியே

மோ.மோகனா,
முன்பள்ளி ஆசிரியர்,
மகாத்மா வீதி,
அல்வாய் வடக்கு
அல்வாய்.

PUBLIC LIBRARY
JAFFNA

# போரின் துயரம்

இருபது ஆண்டுகள் இருளாய்க் கடந்தது – எம்
இளைய தலைமுறை இனமே அழிந்தது
இன்றும் முடிந்த பாடில்லை அழிவுகளும் அழுகைகளும்
இன்னும் தொடரத் துடிக்கும் கோர யுத்தமே
இப்போதாவது திரும்பிப்பார் நீ கடந்து வந்த கறுப்பு தினங்களை

பள்ளி சென்று பாடம் படிக்கவேண்டிய வயதில் - எங்கள்
பாலர்கள் படித்தது எல்லாம் வாழ்க்கையின் வேதனைப்பாடம் - நாம்
வேண்டாம் என்றாலும் வேதனைகள் விட்டபாடில்லை
வேணுமென்றாலும் இன்பம் எம்மைத் தொட்டபாடில்லை

உழைத்து முன்னேற நினைத்த இளைஞர் வாழ்வு
உலக மயமாக்கலின் நன்மையும் முன்னேறத் துடித்த
உழைப்பாளிகள் வாழ்வு இன்று
ஊரூராய்ச்சென்று அகதிகளாய் அலைந்து அந்தஸ்தைத் தேடி

உழைப்பையும் உயர்வையும் அயல்நாட்டவர்க்கு அர்ப்பணித்து
உறவுகளைப் பிரிந்து உண்மை அன்பைத் தேடி
உளநோயாளிகளாய் மற்ரைய நாடுகளில்
ஏன் இந்த நிலை எதற்கு இத்துயர்

இருபதாண்டின் இன்னலே தாங்கமுடியா திருக்கையில்
இனி யுத்தம் ஓர் வினாடியாயினும் வேண்டாம்
ஏது எம் தவறு இம் மண்ணில் பிறந்ததா?
மனிதராய் வாழ நினைத்ததா?

வெளியீடு : அஞ்சலியகம், நெல்லண்டை, குடத்தனை, பருத்தித்துறை

ஏது நியாயம் எல்லோருக்கும் பொதுவான கடவுள்
எம்மை மட்டும் ஓரம் கட்டி ஒதுக்கி வைப்பதா?
குழந்தை என்றும் பார்க்கவில்லை
குடும்பம் என்றும் இரக்கமில்லை

வரும் அழிவுகளைத் தடுக்கவில்லை – யாரும்
வாழ்ந்து முடித்த வயோதிபரும் வாழத் துடிக்கும் இளையோரும்
வேதனைக் காட்சியின் வேதனைப் பொருளாய்
ஏன் இந்த யுத்தம்? எதற்கு இத்தனை ரத்தம்? எதுகுமே புரியாமல்
இருட்டான உலகினுள் இத்தனை இன்னல்களுடன் இலங்கை
இனிவரும் நொடிகளாவது சமாதானத்திற்காய் சாந்தியுடன் மலரட்டும்.

ஆக்கம்
B.Ragulageethan
Pullolynorth
Point Pedro.

**இலவசக் தகவல் தொழில்நுட்பக் கருத்தரங்கு**

ஜெஸ்வின் & பருத்திநகர் கணினிப் பயிற்சியகத்தின் மாணவர் அபிவிருத்திக் குழுவின் ஊடாக பாடசாலை மாணவர்களுக்கான இலவசத் தகவல் தொழில் நுட்பக் கருத்தரங்கு 27-05-2008 முதல் ஆரம்பமாகியது. முதற்கட்டமாக பருத்தித்துறை சென். தோமஸ் பெண்கள் பாடசாலையில் 51 மாணவிகளுக்கு இரண்டு நாட்கள் (27,28-05-2008) நடைபெற்றது. மக்கள் வங்கியின் அனுசரணையுடன் நடைபெற்ற இந்நிகழ்வில் திரு. க. யோகேந்திரநாதன், J/403 கிராமசேவகர், மற்றும் பாடசாலை அதிபர் அவர்களின் முன்னிலையில் ஆரம்பமானது. மாணவர்கள் திறம்பட தகவல் தொழில் நுட்ப கல்வியினை மேற்கொண்டனர்.

# சிறைக் கூ(ட்)டு

பாடும் நிலாவுக்கு இங்கொரு
காடும் நினைக்காத தனிமை
பாவல் கொடியின் பந்தலில்
சுவாசக் காற்றுக்காய் படுத்திட்டால்
பாவற் கசப்புத்தான் காற்றோடு வருமா என்ன?
சேடம் இழுத்துக்கிடக்கும் மனிதவாழ்வின்
கடைசி நிமிடத்தில்,
ஒரு சொட்டு........இரண்டு சொட்டு..........மூன்றாவது.......?
எங்கே நிம்மதியாய் சாகமுடியுமோ..........?
விலாசமிருந்தால்
எனக்கொருமுறை அனுப்புங்களேன்!

சந்தணமப்பிய – என் இரு கண்களும்
ஒரு ரூபாய் குற்றியினால் - அன்று மட்டும்
பூசாரியான என் திருநுதலும்
காதிருந்த செவ்வரத்தம் பூவிதழும்
இதற்கு முன்புகூட என்னை தழுவியதில்லை.

அன்றைய பிரிவுபசாரத்திற்காய் - என்
துஞ்சிய உடல் வானத்தைப் பார்த்தபடி...........
தள்ளிய கடைசி நிமிடத்தில்
மெல்லமாய் துளி நீர் என்னுள் ஊர்ந்தது
முன்ஜென்ம என்பணிகள்
பூரணமாகாதது – அந்த
கடைசியிலும் கூட ஞாபகமேயில்லை.
கல்நெஞ்சப் பாதகர் உலகில்
கடவுளே நீயும் எப்படியோ?
மெல்ல போன என் என் ஜீவனை
காற்றுக் கூட இரக்கமின்றி
இக்கூட்டுக்குள் பூட்டியதும் தகுமோ ?
கடவுளே கருணையிருந்தால் - என்ஜீவனை
கூட்டைவிட்டு வெளியேற்றிவிடு.

வெளியீடு : அஞ்சலியகம், நெல்லண்டை, தும்பளை, பருத்தித்துறை

# கலாநிதி நா.சிவயோகனுக்கு இளம் விஞ்ஞானி விருது – 2006

பருத்தித்துறை நகரத்தில் உள்ள தும்பளைக் கிராமத்தின் மைந்தனான கலாநிதி நாகலிங்கம் சிவயோகனுக்கு 2006ம் ஆண்டிற்கான இளம் விஞ்ஞானி விருது கிடைத்துள்ளது. இது எம்மவர்களுக்கு மகிழ்ச்சியான விடயம் மட்டுமன்றி பெருமை தரும் விடயமுமாகும். இது இளைஞர்கள் கடுமையான உழைப்பின் மூலம் எதையும் சாதிக்கலாம் என்பதற்குச் சான்றாகவும் உள்ளது.

மேற்படி அதிஉயர்விருது இலங்கை விஞ்ஞானத் தொழில் நுட்ப அமைச்சின் தேசிய விஞ்ஞான தொழில் நுட்ப ஆணைக்குழுவினால் 18.12.2007ல் வழங்கப்பட்டுள்ளது. விஞ்ஞானத்தை மக்கள் மயப்படுத்தும் (Popularisation of science) இவரது பன்முகப்பட்ட முயற்சிகளுக்காக இவ்விருது அளிக்கப்பட்டுள்ளது. பாடசாலை மட்டத்தில் விஞ்ஞானப் புதிர் வினாவிடை பேச்சுப்போட்டிகள் (Science Quiz contest), விஞ்ஞானக் கண்காட்சிப் போட்டிகள் (exebition contest), கட்டுரைப் போட்டிகள் (essay contest) போன்றவற்றை நடாத்தி விஞ்ஞான அறிவையும் (Scientific knowledge), புதிய விஞ்ஞானக் கண்டு பிடிப்புக்களையும் (New Invertion) மக்கள் மத்தியில் வளர்ப்பதற்கு இவர் செய்துவரும் சேவைகளுக்காக இவ்விருது கிடைத்துள்ளது.

இவரின் சேவைகளில் முக்கியமானதாக மாணவர் ஆய்வாளர் விருது (Student Reseache Award) போட்டிகள் நடாத்தி விஞ்ஞான ஆய்வு கலாச்சாரத்தை (Science culture) எமது சமூகத்தில் உருவாக்க இடைவிடாது தொடரும் பணிக்காக கொடுக்கப்பட்டமை குறிப்பிடக்கூடிய ஒன்றாகும்.

இவர் தனது விஞ்ஞான மேம்பாட்டு பணி நடவடிக்கைகளை யாழ்ப்பாண விஞ்ஞான கழகத்தினூடாக (J.S.A – Jaffna Science Association) நடாத்தி வருகின்றார்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் மட்டுமின்றி போர் நிறுத்தக்காலத்தில் (2002-2006) இவரது பணிகள் வன்னி மற்றும் மன்னார் மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்க அரும்பாடுபட்டுள்ளார்.

இவர் இதுவரை 30க்கும் மேற்பட்ட விஞ்ஞானக் கட்டுரைகளை எளிமையான முறையில் தினசரி பத்திரிகைகளிலும் பாடசாலை விஞ்ஞான சஞ்சிகைகளிலும் எழுதியுள்ளார். பொதுமக்களுக்கு மிகவும் பயன்படும் விதத்தில் எழுதிய தொலைபேசிக் கட்டணங்களை சிக்கனமாக்குதல் வாகன ஓட்டுனர் அனுமதிப் பத்திரங்களின் அவசியம் போன்ற கட்டுரைகள் பலராலும் தேடி வாசிக்கப்பட்டமை காணக்கூடியதாக இருந்தது. 20ம் நூற்றாண்டில் இணையற்ற விஞ்ஞானி அல்போட் ஜன்ஸரைன் (Albert Einstin) பற்றி யாழ்ப்பாண தினசரிப் பத்திரிக்கையில் சிறப்புக் கட்டுரை ஒன்றைத் தொடராக பல வாரங்கள் எழுதியுள்ளார். 2006, 2007ம் ஆண்டுகளில் பௌதீகவியலில் நடத்தப்படும் சர்வதேச மட்டப் போட்டியான ஒலிம்பியாட் போட்டிக்கு(Olympiad competition) வடபிராந்திய இணைப்பாளராக (Co – Odinator of Northen Province) இலங்கை பௌதீகவியல் சங்கத்தால் (Institute of Physics, Srilanka) நியமிக்கப்பட்டுள்ளார். இப்போட்டியை நடத்துவதற்காக செயற்பாட்டுக் குழுவினரும் (Activity Compain ) பங்கு பெற்றும் மாணவர்களின் எண்ணிக்கையை பல நூற்றுக்களாக அதிகரிக்க கடுமையான இவரின் உழைப்பு பின்னணியாக இருந்தது.

26-12-2004 அன்று காலை பருத்தித்துறை, தும்பளையின் வடக்கு, கிழக்கு கரையோரப்பகுதிமக்கள் சுனாமி அனர்த்தத்தினால் அல்லோலகல்லோலப்பட்டு பரிதவித்து ஓடினர். நெல்லியடியில் தனது புகுந்த வீட்டில் நின்ற இவர் தொலைபேசிமூலம் அனர்த்தம் பற்றி அறிந்துகொண்டவுடன் தனது ஒளிப்பகுதிக் கருவியை எடுத்துக்கொண்டு கரையோரப் பகுதிகளுக்கு விரைந்தார். சுனாமியின் அனர்த்தங்களை இக்கட்டானதும் ஆபத்தானதுமான கணங்களில் நின்றுகொண்டு பதிவுசெய்தார். இது சிறந்ததொரு ஆவணப்பதிவாக (Documentary Flim) என்று காணப்படுகிறது. இந்த

சுனாமி அனுபவங்களை உதயன் பத்திரிகையில் தொடராக எழுதிப் பதிவுசெய்தார். 3வது சுனாமியலையில் எழுச்சியையும் சீற்றத்தையும் தத்ரூபமாக துணிவுடன் படைப்பிடிப்புச் செய்துள்ளார்.

மேற்படி இளம் விஞ்ஞானி (Young scientist Award) விருதுக்கான உச்சவயதெல்லை 45ஆகும் கலாநிதி நா.சிவயோகநாதன் அவர்கள் தனது 44வது வயதில் அப்பரிசினை நழுவவிடாமல் பெற்றுக்கொண்டதும் ஆளுமையின் ஒரு கூறாகும்.

கலநிதி நாகலிங்கம் சிவயோகன் அவர்கள் தனது ஆரம்ப இடைநிலை கல்விகளை முறையே தும்பளை சிவப்பிரகாச வித்தியாசாலை, ஹாட்லிக் கல்லூரி ஆகியவற்றில் கற்றுள்ளார். தனது உயர் கல்வியையும், கலாநிதிப் பட்டத்தையும் இந்தியாவிலுள்ள ஜெய்ப்பூரில் உள்ள ராஜஸ்தான் பல்கலைக்கழகத்தில் பெற்றுக் கொண்டார். பல்வேறு தேச மாணவர்களுடன் ஒன்றாகப் படித்தும் பல்வேறு செயற்பாடுகளில் ஈடுபட்டும் தனது சமூக நோக்கிலான செயற்பாட்டு ஆளுமையை நன்கு வளர்த்துக் கொண்டுள்ளதையும் இவரில் அவதானிக்க முடிகிறது.

கலாநிதி நா.சிவயோகனின் உடலுறுதி, மனஉறுதி, பதட்டப்படாத நிதானமான போக்கு எந்த விடயத்தையும் ஆழமாக நோக்கும் பண்பு என்பவற்றுடன் சமூகம் மீதான இவரின் அக்கறை வியந்து கூறப்படவேண்டிய ஒன்றாகும். வெறும் ஏட்டுப்படிப்புடன் நின்றுவிடாது எதனையும் நடைமுறைப் படுத்திப்பார்க்கும் பண்பு கொண்டவர். (Practial man) இவர் ஆயிரத்து தொளாயிரத்து தொண்ணூற்றெட்டில் யாழ் பல்கலைக் கழகத்தின் பௌதீகவியல்துறை விரிவுரையாளராக பதவியேற்று 2006ல்இருந்து பௌதீகவியல் துறையின் தலைவராக இருந்து வழிநடத்தி வருகின்றார்.

எதிர்காலத்தில் எமது சமூகத்திற்கு தேவையான பல செயற்பாடுகளை நிறைவேற்றி பெரும் மனிதனாக உயர்ந்து நிற்கப்போகும் தீவிரமான சேவை மனப்பான்மையுள்ள மனிதராவார். அவரின் உயர்வுகள் வரலாற்றின் நியதி இது உண்மை. வெறும் புகழ்ச்சியல்ல.

# "Methodistha Nagar"

There are housing Schemes in the Tsunami affected areas all ever Sri Lanka. Different organizations have taken interest in constructing houses for the needy.

"Methodistha Nagar" is one of the Housing Schemes constructed at Thikkam, Vadamarachchy by a German Organization called "DIAKONIE" Specialty about this scheme is that a single person from Germany donated funds for the land and thirty four houses each costing about eleven to twelve lacks.

The following poem gives the feelings of the inates of the Methodistha Nagar" Thikkam.

From a land far off
With a purpose high and lofty
Came to wipe the tears of
Thirty and four families.

Approached by the Methodists
With the name "DIAKONIE"
Launched a project for the
Needy and forsaken.

We had never dreamt that
We would have a future
But the children of God
Did a mighty work here.

We were nowhere here we thought
Landless Homeless and oppressed
Creator who knows our plight
Opened a way to lift our heads.

For the physical help they rendered
We esteem our Methodist Ministers
Rev. Alagarajah is one
And the other Rev.Sathish.

When we see our shelter we live
Well remember "Diakonie"
With grateful hearts we thank our Lord
And the single generous donor.

The history of the shelter we own.
Will be told for ever and ever
To the ones who enter in
What we call our mansion of gold.

Mrs.J.Thevarajah.
(Retd.Teacher)

வெளியீடு : அஞ்சலியகம், நெல்லண்டை, தும்பளை, பருத்தித்துறை

# ஆங்கிலம் படிப்போம்

## Nouns – பெயர்ச்சொற்கள்

Nouns are the names of persons, places and things.

ஆட்களினதும், இடங்களினதும், பொருட்களினதும் பெயர்களே பெயர்ச்சொற்களாகும்.

The nouns can be divided in many ways.

பெயர்ச் சொற்கள் பல வகைகளாகப் பலவழிகளில் பிரிக்கப்படலாம்.

According to one of the ways the nouns can be divided into two types.

They are

1. Countable nouns
2. Uncountable nouns and / Noncountable nouns

பெயர்ச்சொற்கள் பின்வரும் வகையிலும் பிரிக்கப்படலாம்.

1. எண்ணக்கூடிய பெயர்ச்சொற்கள்
2. எண்ணமுடியாத பெயர்ச்சொற்கள்.

1. Countable nouns:-

Eg:- Letters, girls, books, children, class rooms, bags, etc

எண்ணக்கூடிய பெயர்ச்சொற்கள்:

உ-ம்: கடிதங்கள், பெண் பிள்ளைகள், புத்தகங்கள், வகுப்பறைகள் இவை போன்றவை.

2.UnCountable nouns

Eg: Water, sugar, money, sand, etc.

எண்ணமுடியாத பெயர்ச்சொற்கள்

உ-ம்: தண்ணீர், சீனி, பணம், மண், இவை போன்றவை.

Some types of words or phrases are used before countable nouns or uncountable nouns.

வெளியீடு : அஞ்சலியகம், நெல்லண்டை, தும்பளை, பருத்தித்துறை

Quantity Expression

| Count Nouns | Noncount nouns |
| --- | --- |
| A few | A little |
| Few | Little |
| Fewer | Less |
| Many, so many, too many | much, so much, very much, too |
| Some | Some |
| A lot of | A lot of |
| A number of | An amount of |

Eg: 1. There are forty students in a claas.
Six or seven students are present today
Therefor we can say a few students are present today.

3. I have some toffees
4. I have some money to save
5. My mother had milk in a glass
My brother drank the milk completely.
Now there is little milk in the glass.
6. Cricket player Muralitharan visited Jaffna last week. So many people went to see him. The place was so crowded with people.

7. One spoonful of sugar is enough for me.
You have added two spoons of sugar in my tea cup.
I feel too much sugar in the tea.

8. There are a lot of people to see the newly released film at the Cinema theater
9. This Bag is not enough to fill the sand into it, because there is a lot of Sand in the sack.

வெளியீடு : அஞ்சலகம், நெல்லண்டை, குப்பிளான், பருத்தித்துறை

10. No students come to school on Sundays.
Therefore we can say few students come on Sunday.
Practice the following exercise.

Underline the correct word or phrase.

1. There is (so many, too many, so much) water in the well.
2. (Large number of, small amount of, big amount of) of students sat for the written exam.
3. We can see (few, a few, little) people on roads during curfew time.
4. How (many, much, so many) money do you want?
5. I feel (much, many) thirsty. I want to drink even a mouthful of water to drink. But there is (little, few) water in the pot.
6. I want ( a few, a little) students to arrange the classroom.
7. (Too much, too many) fat causes to cholesterol.
8. I saw (too much, too many) people in the temple festival.

## வாழ்த்துகின்றோம்

அஞ்சலியக இயக்குனர் அருட்தந்தை டேமியன் அடிகளார் அவர்கள் தமது குருத்துவ பணிவாழ்வில் 36வது ஆண்டினை நிறைவு செய்து 37வது ஆண்டில் காலடி எடுத்து வைத்திருக்கும் அருட்தந்தையின் பணி மென்மேலும் சிறந்து மிளிர வேண்டும் என வாழ்த்திநிற்கின்றது அஞ்சலி குழுமம்.

வெளியீடு : அஞ்சலியகம், நெல்லண்டை, குப்பிளான், பருத்தித்துறை

# மகாசிவராத்திரி விரதம்

மாசிமாதத்து தேய்பிறை 13ம் நாள் மகாசிவராத்திரி தினமாகும். சைவசமயத்தில் பிறந்த எவரும் இவ்விரதத்தை மிகப் பவித்திரமாக அனுஷ்டிக்க வேண்டும். தனித்து பசித்து, விழித்து இருக்க வேண்டும். மனம் அறிந்தோ, அறியாமலோ அன்று பூசை செய்தாலும் சிவகதி கிட்டும். மார்க்கம் தவறிய ஒரு பெண் சாகும் தறுவாயில் அன்று நித்திரை விழித்து ஒரு வில்வம் இலையால் அவளை அறியாது வீசியபோது அவ்விலை சிவலிங்கத்தின் மேல் விழுந்தது. அன்று சிவராத்திரி தினம் அவளை தேவர்கள். புஷ்பக விமானத்தில் சொர்க்கத்திற்கு அழைத்துச் சென்றனர். இவ் வரலாறு சிவராத்திரி புராணத்தில் கூறப்பட்டுள்ளது.

இக்காலத்திலும் சிவராத்திரி விழா கொண்டாடப்படுகிறது சகல தரப்பினராலும். ஆனால் தொலைக்காட்சி பார்த்தபடியும், லீற்றர்க் கணக்கில் கள்ளும், மற்றும் செய்யக்கூடாத குற்றங்கள் செய்த வண்ணமும் விரதம் அனுஷ்டிக்கிறார்கள். இவர்களது சிந்தை சிவனிடம் சென்றால் இவர்களுக்கும் நற்பலனே. காரணம் மேல கூறப்பட்டபடி அமார்க்க நெறியுடைய பெண்ணே அன்று அறியாமல் அர்ச்சித்தத்திற்கே சிவகதி என்னும்போது பவித்திரமாக அனுட்டித்தவருக்கு நற்கதி நிச்சயம். ஆகவே சைவர்கள் உயிருக்கு மேலாக இவ்விரதத்தை அனுஷ்டிக்க வேண்டும். தீட்சை பெறவேண்டும். அதற்கு உணவு விடயங்கள் தடையல்ல எப்போது உணவு விடயத்தில் பவித்திரமாக இருக்கின்றோமோ அன்று தீட்சை பெறலாம்.

கீழே சிவராத்திரி விரதமனுட்டிக்கும் முறைகளை தருகின்றோம்.

## அபிஷேகம்

முன்னம் முதற்சாமத்தில் ஆனின் ஐந்தால் ஆட்டிடுக. முறைமை யாக பின்னர் இரண்டாம் சாமத்தில் ஐந்து அமிர்தால் ஆட்டிடுக பிரசந்தன்னா.

நன்னயம் சேர் மூன்றாம் சாமத்தில் ஆட்டிடுக நாலாம் சாமம் கன்னரின் சாற்றினில் ஆட்ட காரண ஆகமம் எடுத்து கழற்றீற்றன்றோ.

முதலாம் சாமம்: குற்றமில்லா பசுவின் சலம், தயிர், பால், சாணம், நெய்

இரண்டாம் சாமம் - சிவந்ததேன், குற்றமிலாத சர்க்கரை, தயிர்பால், நெய்

மூன்றாம் சாமம் - தேன்

நான்காம் சாமம் - கருப்பஞ்சாறு

## மேற் பூச்சு

சந்தனமுற் சாமத்தி லகிலிரண்டாஞ் சாமத்திற் சாமமூன்றிற்
கந்தமிருங் கருப்பூரங் கடைச்சாமங் குங்குமஞ் செங்கமலப் போதில்
வந்தருணான் முகன் முகுந்தன் மகபதிவா னவரெவரும் வணங்கியேத்து
மந்தமிலா முழுமுதல்வன் திருமேனி குளிர மிகு மன்பிற் சாத்தி

முதலாம் சாமம் - சந்தனம்

இரண்டாம் சாமம் - அகிலஞ்சந்தனத்தையும் (அகில்)

மூன்றாம் சாமம் - கருப்பூரம் பொடி (பச்சைக் கற்பூரம்)

நான்காம் சாமம் - குங்குமம்

சிந்திய ஆகமம் (சித்த தந்திரம்)

சாத்த வேண்டிய மலர்

முன்சாமம் - வில்வம்

இரண்டாம் சாமம் - தாமரை

மூன்றாம் சாமம் - சிறுசண்பக மலரையும்

நான்காம் சாமம் - நந்தியாவர்த்தம்பூ

சிந்திய ஆகமம்

முன்சாமம் - தாமரை

இரண்டாம் - துளசி

மூன்றாம் சாமம் - கண்டகம் சேர் கூவின முத்தளக்கிளை முட்களுடைய வில்வத்தினது மூவிதழ்கள் பொருந்திய பத்திரம்.

நான்காம் சாமம் - நீலோற்பவம்.

காரணாகமம்

பஞ்சவில்வம் - வில்வம், நொச்சி, மாவிலங்கை, முடகிளுவை, விளாத்தி

நிவேதனம்

1ம் சாமம் - பயற்றம் பருப்புக்கலந்தன்னம்

2ம் சாமம் - தீதகல் பாயசம்

3ம் சாமம் - திலம் சேர் அன்னம்

4ம் சாமம் - சுத்த அன்னம்.

விரதங்கள்

உபவாசம் மேற்கொண்டோர் அடுத்தநாட் காலையிலேயே நித்திய கருமங்களை முடித்துக்கொண்டு சூரியயோதய ஆறு நாளிகைக்குள்ளே சிவனடியாரோடு பாரணம் பண்ணல் வேண்டும். பாரணம் பண்ணியபின் பகலிலே நித்திரை செய்யவொட்டாது. (பாரணம் - உபவாசத்திற்குப் பின் உட்கொள்ளும் உணவு)

சிவராத்திரி விரத பலன் பாவநீக்கமும், உலகம் எல்லா நலன்களும் பெற்று செழித்தலுமே.

சிவராத்திரியில் நான்கு சாமப்பூசை விதிமுறைகள்

| சாமம் | மலர் | பத்திரம் |
|---|---|---|
| 1வது | தாமரை, அலரி | வில்வம் |
| 2வது | சண்பகம் | தாமரை, துளசி, வில்வம் |
| 3வது | செங்கழுநீர்,ஆத்தி, பிச்சி | முட்கிளுவை, வில்வம், அறுகு |
| 4வது | நந்தியாவர்த்தம் | விளா |

| சாமம் | பழம் | தூபம் | ஓதும்வேதம் |
|---|---|---|---|
| 1வது | வில்வம் | சாம்பிராணி | இருக்கு |
| 2வது | பலா | சந்தணக்கட்டை | யசுர் |
| 3வது | மாதுளம் | குங்குலியம் | சாமம் |
| 4வது | நானாவிதபழங்கள் | கர்ப்பூரம் | அதர்வனம் |

சைவசித்தாந்த பண்டிதர்
சிவஸ்ரீ. தியாக. சோமஸ்கந்தராஜாக்குருக்கள்(B.A, M.A)
அதிபர் , குடத்தனை அ.த.க.பாடசாலை.

**சிவ ஸ்ரீ.சோமஸ்கந்தராஜாக் குருக்கள் அவர்கள் தமது குருத்துவப் பணிவாழ்வின் 25வது ஆண்டினை நிறைவுசெய்து 26வது ஆண்டில் காலடி எடுத்துவைத்திருக்கும் குருக்களை மனமாற வாழ்த்தி நிற்கின்றது அஞ்சலிக் குழுமம்.**

**அஞ்சலி உங்கள் சஞ்சிகை**

எனவே இதை வளர்க்க உங்கள் விமர்சனங்களையும் காத்திரமான உங்கள் படைப்புக்களையும் எழுதி அனுப்புங்கள். பூப்பறிக்க கோடரி தேவையில்லை. அஞ்சலியின் வயர்ச்சிக்கு உங்கள் அன்பான, ஆக்கபூர்வமான விமர்சனங்களை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றோம்.

ஆசிரியர்

வெளியீடு : அஞ்சலியகம், நெல்லண்டை, தும்பளை, பருத்தித்துறை

# என்றும் இளமையே வாழ்வின் வசந்தம்

நீண்ட ஆயுளுடன் நோய்நொடியற்ற சுகதேகியாய் துள்ளும் இளமையின் இரகசியம் பற்றி பலராலும் அறியப்படாமல் இருக்கும் சிறு உண்மைகள்: சிலர் அறிந்தும் பின்பற்றாது இருக்கும் உண்மைகள்: வேறு சிலர் முதுமை வந்து வாட்டும் போது எண்ணி, எண்ணி ஏங்கும் உண்மைகள்: இளமையுடன் நோய் நொடி இல்லாமல் வாழ்வதற்கு எந்த மனிதன்தான் உளமாற விரும்பமாட்டான்? எல்லோரும் விரும்பும் துள்ளும் இளமையை பலரைக் கவரும் வனப்பை எவ்வாறு பேணிப்பாதுகாத்து நலமுடன் வாழ வேண்டும் என்பதை சிறிது ஆராய்வோம்.

முதுமையைத் துரத்துவோம்.

முதுமைப் பருவத்திலும் இளமைத் துடிப்புடன், அழகாய், சுகதேகியாய் வாழ பல வழிகள் உண்டு என்றும் இளமையாய் இருப்பதற்கு மன ஒருமைப்பாடு, நல்லொழுக்கம், கட்டுப்பாடு, உடற்பயிற்சி முக்கியம் முதலில் நம் மனதை ஒரு நிலைப்படுத்த வேண்டும். அதற்குக முதல் வழி தியானப்பயிற்சி செய்யவேண்டும்.. எம் உடலை, உடைகளை சுத்தமாக்குவதற்கு நீரால் கழுவுகின்றோம்: சவர்க்காரம் போடுகின்றோம். ஆனால் நம் மனதை சுத்தம் ஆக்குவதற்கு என்ன செய்கின்றோம்? என்ன செய்யவேண்டும்? அதற்கு தியானப் பயிற்சி செய்யவேண்டும். மனம் ஒருநிலைப்படாத எந்தஒரு பயிற்சி செய்தாலும் எந்தவொரு பயனும் விளையப்போவதில்லை. மனம் ஒன்றும்போதுதான் இளமையைப் பேணும் பயிற்சிகளை ஒழுங்காகச் செய்யவும் பயனைப் பெறவும் முடியும். மனம் உடம்போடும் பயிற்சியோடும் இணைந்து நிற்றல் வேண்டும்.

நல்ல எண்ணங்கள் ஒருவனை உய்விக்கின்றன இளமையாக வைத்திருக்கின்றன. உங்கள் உள்ளத்திலே நல்ல எண்ணங்களை வளருங்கள். நல்ல எண்ணங்களை மனதில்

நினையுங்கள். அது மேலும் உங்களை இளமையாக வைத்திருக்கும். உங்கள் நல்ல உள்ளத்தின் வெளிப்பாடு உங்கள் உடலின் கவர்ச்சியாகத் தோன்றும். உறுதியோடு, உயர்ந்த நோக்கோடு பயிற்சிகளைத் தொடருங்கள் அதுவே இளமைக்கு முதற்படி, வெற்றிக்கு முதல் வழி. முதுமையைத் துரத்துங்கள், இளமையை இருத்துங்கள். இளமை எங்கே இளமை எங்கே என்று தேடுங்கள். அது எங்கிருந்தாலும் நாடி ஓடுங்கள்.

எழுமின், விழுமின் கருதிய கருமம் கைகூடும் வரை நில்லாது செல்மின் என்றார் சுவாமி விவேகானந்தர்.

### உடற்பயிற்சி செய்தால் விளையும் நன்மைகள்

உடற்பயிற்சி என்றால் என்ன? நீண்ட ஆயுளையும் உடலுக்கு உறுதியையும், சுறுசுறுப்பையும், நோய் எதிர்ப்பு சக்தியையும், உடலிலே ஒரு வனப்பையும் ஒரு உருவ அமைப்பினையும் அளித்து ஒரு மனிதனை, மனிதனின் வாழ்வை மேம்பட வைத்து செயலாற்றுவதுதான் உடற்பயிற்சி. உடற்பயிற்சியில் பல வகையான பயிற்சி முறைகள் உண்டு. ஒருவர் தேர்ந்தெடுக்கும் விளையாட்டைப் பொறுத்து பயிற்சி முறைகள் மாறுபடும்.

தினசரி உடற்பயிற்சி செய்வதினால் நோய் நொடியற்ற வாழ்வைப் பெறுகின்றோம். இரத்த அழுத்தம் குறைகின்றது. இரத்தத்தில் கொழுப்பு குறைகின்றது. தொடர்ந்து உடற்பயிற்சி செய்வதினால் உடல்நிறையும் குறைகின்றது. பருத்த உடல் நிறை உள்ளவர்களுக்கு ஏற்படும் பல நோய்களையும் அதனால் ஏற்படும் பல தாக்கங்களையும் தணிக்க உதவி செய்கின்றது. தசை நார்கள் சுறுசுறுப்பாக இயங்குகின்றன. இரத்தம் சுத்தமாக்கப்படுகின்றது. உடம்பிலுள்ள அழுக்குகள் வியர்வை மூலமாக வெளியேறுகின்றன. மனமும், இருதயமும், உடலும் வலுப் பெறுகின்றன. இப்போது நோய்களுக்கு கண்டுபிடிக்கப்பட்டுள்ள எந்த நோய்களுமே உடற்பயிற்சியினால்

வாழ் நாள் முழுதும் கிடைக்கும். ஆரோக்கியத்ததைக் கொடுக்காதென்கிறார்கள் பெரிய டாக்டர்கள் ஆகையால் நாம் உடல் நலத்துடன் வாழவேண்டுமானால் உடற்பயிற்சி செய்வது மிக மிக அவசியம். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம். உங்கள் உடல்நலத்திற்கேற்ற ஒரு பயிற்சியைத் தெரிந்தெடுத்து ஒரு குருவின் செய்யத்தொடங்குங்கள். சில சமயம் உங்களுக்கு மனதில் சில சந்தேகங்கள் தோன்றலாம். இளமையாய் இருப்பதற்கு முதுமையில் உடற்பயிற்சி செய்யலாமா, எங்களால் முடியுமா என்று எண்ணலாம், நிச்சயம்முடியும். எல்லாம் உங்கள் மனதில், மனஉறுதியில் தங்கியிருக்கின்றது. பயிற்சிக்கு வயதெல்லை கிடையாது. எந்த வயதிலும் அவர் உடல் நிலைக்கேற்ப பயிற்சிகளை செய்யலாம். பயிற்சிகளை தொடர்ந்து செய்பவராக இருந்தால் ஒருவர் தொடர்ந்து பயிற்சிகளை செய்யலாம். எதுவிதபயிற்சியும் முன்புசெய்யாமல் பயிற்சிகளை தொடங்குபவர் வைத்தியரின் ஆலோசனையை நிச்சயம் பெறவேண்டும்

உங்கள் உடல் நலத்திற்கு உறுதுணை நிற்கும் பயிற்சிகள்

**யோகாசனம்**

என்றும் இளமையாக இருப்பதற்கும் நோய்நொடி இல்லாமல் இருப்பதற்கும்,நாடி, நரம்புகளை திடப்படுத்துவதற்கும் பொதுவாக எல்லாதசைகளும் இயங்குவதற்கும் யோகாசனப்பயிசியே தலையாயது. குறைகளைப்போக்கி உடலுக்கு ஆரோக்கியத்தை வழங்குகின்றது. உடலில் ஒவ்வொரு அங்கங்களையும் தட்டி எழுப்பி ஒரு புதிய உலகை காணவைக்கும். தொன்மையான இக்கலை உடல் நலத்திற்கு மிக முக்கியமானது. வயது வித்தியாசமின்றி எல்லா வயதினரும் செய்யலாம். ஒரு குருவின் மூலம் செய்ய வேண்டிய பயிற்சி

உடற் கட்டழகுக்கலை:

இக்கலையைச் தொடர்ந்து செய்பவர் ஒரு திடகாத்திரமான, கம்பீரமான தோற்றத்தை பெறுவார். முதலில் நீட்டல் பயிற்சி (stretches) அதன் பின்பு தன்னிச்சை பயிற்சி: அதன்பின்புதான் உடற் கட்டழகுக் கலைப்பயிற்சியை செய்யவேண்டும். உங்கள்

முன்னேற்றம் (பயிற்சியில்) கால எல்லைக்கு ஏற்றவாறு பயிற்சியின் அட்டவணைகள் மாறும். இப்பயிற்சியினால் உங்கள் உடலில் பல மாற்றங்களைக்கண்டு நீங்கள் மட்டுமல்ல பலரும் அதிசயப்படுவார்கள்.

தன்னிசைப்பயிற்சி (Free hand exercise)

எந்தவித உபகரணங்களும் இல்லாமல் உங்கள் உடல் நிறையைக் கொண்டு உங்கள் கைகள், கால்களால் செய்யும் பயிற்சிகள் Push – Ups, இருந்து எழும்புதல் Deep Knee Bends (squats) பஸ்கி, தொய்டா முதலியன. இப்பயிற்சிகள் செய்வதன் மூகலமாக நல்ல உடல் அமைப்பை பெற முடியும். களைப்பை நீக்கும் இதயம் நல்ல பலமடையும்.

வேகமாக நடத்தல், வேகமாக ஓடுதல்

இப்பயிற்சிகளும் கூடிய பிராண வாயுவை நாம் சுவாசிக்க வைக்கின்றது. முழு உடலுக்கும் உரிய பயிற்சியாகும். ஓய்ந்திருக்கும் நிமிடத்திற்கு 480 கன அங்குலம் காற்றை சுவாசிக்கின்றான் ஆனால் மணிக்கு 4 மைல் வீதம் நடக்கும் ஒருவன் நிமிடத்திற்கு 1550 கன அங்குலக்காற்றை சுவாசிக்கின்றான். பயிற்சியில் எவ்வளவு நன்மை கிடைக்கின்றது என்று பாருங்கள்.

இறுதியாக சிந்திக்க செயலாற்ற, கடைப்பிடிக்க

பயிற்சி செய்யும் நேரங்களில் நல்ல சத்தான உணவுகளை உண்ணவேண்டும். நன்றாக உறங்க வேண்டும். நன்றாக ஓய்வு எடுக்கவேண்டும். அந்த ஓய்வு நேரத்தில்தான் தசைக்கட்டுகளில் ஏற்பட்ட சிதைவுகள் வளர்ச்சியடையும். புயிற்சிகளை விதிமுறைகளுக்கு அமையச்செய்ய வேண்டும். பயிற்சியின் போது எண்ணிக்கையை விட முழுமையான ஒழுங்கான முறையான செய்முறைகள்தான் முக்கியம். ஆண்கள் மட்டுமல்ல பெண்களுக்குரிய பயிற்சிகளும் நிறைய இருக்கின்றன.

அவர்களும் பயிற்சிகளை செய்யமுன்வரவேண்டும். ஆரோக்கியமான வாழ்விற்கு சூரிய வெளிச்சம், சுத்தமான காற்று, சுத்தமான குடிநீா் இவைகளும் முக்கியமானவைகளாகும். மது, போதைப்பொருள், புகைத்தல் இவைகளை முற்றாக நீக்குங்கள்.

உடல் தளர்ந்து, மயிா் உதிர்ந்து, பல் விழுந்து, கன்னம் குழி விழுந்து, கண்கள் பார்வை குறைந்து, அவயவங்கள் பழுதடைந்த பின் எந்தப் பயிற்சி செய்தாலும் இளமையைக் காப்பாற்ற முடியாது. முதுமையிலும் இளமையாக இருக்க வேண்டுமானால், நோய் நொடி இல்லாமல் வாழவேண்டுமானால், பயிற்சியை தொடருங்கள். அதிக கோபம், மனக்கவலை இவைகளைப போக்கி சாந்தமான, அமைதியான மனத்துடன் இருங்கள். மனதில் இருந்து துன்பத்தை துரத்துங்கள். இன்பத்தைப் பெருக்குங்கள். மனம் விட்டுச்சந்தோசமாக சிரியுங்கள். உங்கள் பொன் நகையைவிட உங்கள் புன்னகை கோடி பெறும். இளமை அது என்றும் இனிமை முதுமையிலும் இளமையைத் தேடுங்கள்.

பதினாறு வயதில் அழகாய் இருப்பதில் உனக்கு பெருமை ஒன்றும் இல்லை. அறுபது வயதில் அழகாய் இருந்தால் அது உன் ஆன்மாவின் தனிப்பட்ட சாதனை என்றார் அறிஞர் மேரிஸ் டோட்ஸ்.

பொன்.மகாதேவா
“இளமையின் இரகசியம்”
நூலாசிரியர்.

## சுயநியாயப்படுத்தல்/ Self justification

மனிதர்கள் ஒவ்வொருவரும் தமது நடத்தை அல்லது எண்ணம் அல்லது மனப்பாங்கு தொடர்பாக தமக்குள்ளேயே இருவேறுபட்ட கருத்தியல்பைக் கொண்டிருப்பர். இருப்பினும் அவற்றில் ஏதேனும் ஒன்றினை செயற்படுத்துகின்றபோது மற்றைய கருத்துத்தொடர்பாக தமக்குள்ளேயே தாம் நியாயம் கற்பிக்கின்ற நடவடிக்கையே இதுவாகும்.

உதாரணமாக தயாபரன் "பரினா" கார் ஒன்றை விரும்பி வாங்குகின்றான் இதனைப்பார்த்த லக்ஸ்மன் இந்தக்கார் சரியில்லை இது அதிகம் பெற்றோல் எடுக்கும் இதனைத் திருத்துவதும் சிரமம் என்று கூறினான். இதே போன்று வேறு ஒரு நண்பனும் கூற தயாபரனுக்கு இசையொவ்வாமை ஏற்படுகின்றது. இந்த இசையொவ்வாமையைத் தவிர்க்க தயாபரன் தனது மனதுக்கே தானாகக் கூறிக்கொள்ளும் நியாயப்பாடுகளையே சுய நியாயப்படுத்தல் என்கின்றோம்.

## சுயநியாயப்படுத்தல் மேற்கொள்ளப்படும் சந்தர்ப்பங்கள்

01. இசையொவ்வாமை அதிகரிக்கின்ற போது
02. ஒருவன் ஏன் இவ்வாறு செயற்படுகிறான் காரணம் என்ன என்று சிந்திக்கும் போது
03. பெரிய அழிவு ஒன்றுக்கு தான் காரணம் என்று தெரிகின்ற போது
04. அதீத தண்டனை கொடுக்கப்படும் போது
05. குறைந்த தண்டனை கொடுக்கப்படும் போது

## விளைவினை ஞாயப்படுத்தல்

ஒவ்வொரு மனிதனும் தன் வாழ்வில் பல அடைதல் (இலட்சியம்/ தேவை) களைப் பெற முயல்கின்றான். அவ்வாறு முயலும் ஒரு அடைதலைப் பெற முற்பட்ட போது அது எதிர்மறையான அல்லது

பாதகமான விளைவை ஏற்படுத்தி விட்டால் அத்தகைய விளைவை ஞாயப்படுத்துவதையே விளைவினை ஞாயப்படுத்துதல் என்கின்றோம்.

உதாரணமாக சாந்தி க.பொ.த (சா/த) பரீட்சையில் உன்னத சித்தியைப் பெற வேண்டும் என்ற இலக்குடன் கல்வி கற்றாள். இருப்பினும் அவள் பரீட்சையில் சித்தி பெறவில்லை. சாந்திக்குப் பரீட்சைக்காலத்தில் சிக்கின் குனியா வந்ததனாலேயே சரியாகப்படிக்கவில்லை. இல்லாவிடில் நல்ல பெறுபேறு பெற்றிருப்பாள் என்று கூறுதலைக் கூறலாம். இவ்வாறே எல்லாச் சூழலிலும் பலவிதமான சுய நியாயப்படுத்தல்கள் இடம்பெறுகின்றன.

## Justification of cruelty
## கொடூரத்தை நியாயப்படுத்துதல்

கொடூரமான சகிக்க முடியாத விடயங்களும் கூட ஆதிக்கம் உடையோரால் அல்லது பெரும்பான்மையினரால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றபோது அதிலே நியாயமானதாகவும் சரியானதாகவும் கருத்தில் கொள்ளப்படுகின்றது.

அண்மையில் திருட்டுச்சம்பவம் ஒன்றில் அகப்பட்ட திருடன் ஒருவனை மடக்கிப்பிடித்த மக்கள் அவனை அடித்தே கொன்றனர். இது ஒரு கொடூரமான செயற்பாடு மட்டுமன்றி அவனைக்கொள்வதற்கான உரிமையோ அதிகாரமோ யாருக்கும் கிடையாது. இத்தகைய செயல்களையே கொடூரத்தை நியாயப்படுத்தல் என்கின்றோம். ஒரு சூழலில் எதிர்மறையான தவிர்க்க முடியாத சூழல் அமைகின்ற போது இத்தகைய கொடூரத்தை ஞாயப்படுத்துகின்ற நிகழ்வு நடைபெறுகின்றது.

## சுய மதிப்பீட்டின் முக்கியத்துவம்

ஒருவர் தன் மீது தானே வைத்திருக்கும் அளவீடே சுய மதிப்பீடு ஆகும். இத்தகைய சுயமதிப்பீடு பாதிக்கப்படுகையில் குறித்த நபர் தான் சார்ந்த நிலைப்பாடு ஒன்றில் தன்னை ஆழமாக அர்ப்பணிக்கின்றார். எனினும்

இசையொவ்வாமை மனிதனை உற்றுப்பார்க்க உதவுகின்றது. ஆனால் எமது சுய எண்ணத்தை நடத்தை மீறுகின்றபோதுதான் இசையொவ்வாமை ஏற்படுகின்றது. ஆகவே சுயமதிப்பீடு சரியான முறையில் அமைகின்ற ஒருவருடைய சுயநியாயப்படுத்தலும் சரியான முறையில் அமையும் எனலாம்.

சில மனிதர்கள் ஒருசில நிகழ்வுகளை அவதானித்துவிட்டு அந்நிகழ்வின் விளைவுகளிலிருந்து ஒரு முடிவிற்கு வருவர்.எவ்வாறெனினும் தான் பற்றிய சுயமதிப்பீடானது எப்போதும் சரியானதாக அமைய வேண்டும்.

## சுயமதிப்பீட்டின் அனுகூலங்களாக பின்வருவனவற்றைக்கூறலாம்

- தம்மைப்பற்றிய சரியான எடை இருக்கும்
- தமது இயலளவை சரியாகத்தெரிந்திருப்பர்
- தமது பலம் பலவீனம் வாய்ப்புக்கள் இடர்களை சரியாக மதிப்பிடுவர்.
- சரியான நியாயப்பாட்டைக் கொண்டிருப்பர்.
- தேவையற்ற தோல்விகள் கற்பனைகளைத் தவிர்க்கலாம்
- சமநிலை ஆளுமை கொண்டவர்களாக இருப்பர்.

த.சிறீகமலநாதன்
ஆற்றுப்படுத்தல் பயிலுனர்
அகவொளி
யாழ்ப்பாணம்

வெளியீடு : அஞ்சலியகம், … பருத்தித்துறை

# அஞ்சலி அகத்தினால் நடாத்தப்பட்ட மகளிர்தின கலைவிழாவும் விளையாட்டுப்போட்டியும்.

மகளிர் தின கலைவிழா நிகழ்வானது 08-03-2008 சனிக்கிழமை காலை 9மணிமுதல் அஞ்சலி அகத்தில் "பெண்களுக்கும் யுவதிகளுக்குமான முதலீடு" என்ற இவ்வருட மகளிர்தின தொனிப்பொருளில் நடைபெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக செல்வி திலகவதி பெரியதம்பி (ஓய்வு பெற்ற மகாணக் கல்வி அதிகாரி) வருகை தந்து சிறப்பித்திருந்தார். முதன்மை விருந்தினராக அருட்சகோதரிகள் ஓய்வுபெற்ற ஆசிரியர், மெதடிஸ்த திருச்சபைப் போதகர், பருத்தித்துறை மறைக்கோட்ட முதல்வர், உதவிப்பொது முகாமையாளர், அதிபர்கள், ஆசிரியர்கள், சுகவாழ்வுப் பணியாளர்கள், பெரியோர்கள், பெற்றோர்கள், அஞ்சலி இளையோர் கழக உறுப்பினர்கள், உளவளத்துணை பயிற்சி நெறி ஆசிரியர்கள், அஞ்சலிப் பூக்கள் சிறுவர் கழக உறுப்பினர்கள், மசனட் ஆங்கிலக் கல்வியக மாணவர்கள் மற்றும் உற்றார் நலன் விரும்பிகள் யாவரும் இவ்விழாவுக்கு வருகைதந்திருந்தார்கள்.

இந் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினர்களாக வருகை தந்தவர்களுக்கு அன்னையர்களினால் மலர்ச்செண்டுடன் பெண்ணின் குணவியல்வுபற்றிய வாக்கியங்களும் இணைத்துக் கொடுத்து வரவேற்கப்பட்டது. பின்பு துணையிழந்த ஒரு பெண்ணின் வாழ்வுக்கு வசந்தம் ஊட்டும் ஒரு காட்சியும், இறை வணக்கத்துடன் இந் நிகழ்வானது ஆரம்பிக்கப்பட்டது.

வரவேற்புரை, வரவேற்பு நடனம், ஆசியுரை, அன்னையர்களின் குழு நடனம், நாடகம், தனிப்பாடல்கள், தனிநடனம், கவிதை, வில்லுப்பாட்டு, பிரதம விருந்தினர் உரை முதலிய நிகழ்வுகள் சிறப்புற நடைபெற்றது.

வெளியீடு : அஞ்சலியகம், நெல்லண்டை, தும்பளை, பருத்தித்துறை

மகளிர் தின சிறப்பு நிகழ்வாக விளையாட்டுப் போட்டி அஞ்சலியக மைதானத்தில் மாலை 2.30 மணியளவில் நடைபெற்றது.

இந் நிகழ்வுக்கு பிரதம விருந்தினர் ஆர்.வரதீஸ்வரன் (பிரதேச செயலர் பருத்தித்துறை) அவர்கள் வருகை தந்து சிறப்பித்திருந்தார். முதன்மை விருந்தினர்களாக பருத்தித்துறை மறைக்கோட்ட முதல்வர், இளைமையின் இரகசியம் நூல் ஆசிரியர், ஹாட்லிக் கல்லூரி ஆசிரியர், பிரபல வர்த்தக உரிமை யாளர். உளவளத்துணை பயிற்சி நெறி ஆசிரியர்கள், கிராம சேவையாளர், அஞ்சலி இளையோர் கழக உறுப்பினர்கள், அஞ்சலி சிறுவர் கழக உறுப்பினர்கள். மசனட் கல்வியக உறுப்பினர்கள். மற்றும் பெற்றோர் பெரியோர், உற்றார் நலன் விரும்பிகள் யாவரும் இந் நிகழ்விற்கு வருகை தந்திருந்தார்கள்.

இந்நிகழ்வுக்கு முதன்மை விருந்தினர்களாக வருகை தந்தவர்களுக்கு மாலை அணிந்து மலர்ச்செண்டு கொடுத்து வரவேற்கப்பட்டதுடன், விருந்தினர்களால் மகளிர்தின பலூன்கள் பறக்கப்படவிட்டன. இறை வணக்கத்துடன் இந் நிகழ்வானது ஆரம்பமானது. வரவேற்புரை அஞ்சலியக இயக்குனர் உரை, பிரதம விருந்தினர் உரை, அன்னையர்களுக்கும், யுவதிகளுக்குமான விளையாட்டுக்கள் நடைபெற்றது.
(தேசிக்காய் கரண்டி ஓட்டம், சமநிலை ஓட்டம், நாப்பயிற்சிப் போட்டி, குறிபார்த்து பந்து எறிதல், சங்கீதக் கதிரை, புகையிரத விளையாட்டு) போட்டியில் பங்குபற்றிய அனைவருக்கும் வெற்றியீட்டிய வீராங்கனையினருக்கும், மற்றும் இளையோர் கழக உறுப்பினர்கள், பெண்கள் கழக உறுப்பினர்கள் அனைவரிற்கும் சிறந்த பரிசில்கள் வழங்கப்பட்டதுடன் காலையில் நடைபெற்ற நிகழ்வுகள் மிகச் சிறந்த நிகழ்வுக்கும் போட்டிகளில் முதலிடம் பெற்றவர்களுக்கும் வெற்றிக் கிண்ணம் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டது. இறுதியில் மாலை 5.30மணியளவில் நிகழ்வுகள் யாவும் இனிதே நிறைவேறியது.

மகளிர்தின நிகழ்வுக்கு வந்திருந்தோர் மகளிர்களின் திறமைகளையும் ஆற்றல்களையும், செயற்பாடுகளையும கண்ணால் கண்டு பிரமித்து பாராட்டுக்களை தெரிவித்தனர்.

# நெஞ்சில் நிறைந்தவை

யாழ் மாவட்டத்தின் வடமராட்சிப் பகுதியிலே தும்பளை எனும் கிராமத்தில்...........
அருட் தந்தை டேமியன் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட அஞ்சலி அகமானது முதலில் உளவளத்துணையகமாக தன்னை இனம் காட்டி பின், காரிருள் சூழ்ந்த மக்களின் மனங்களில் ஒளியேற்றி அவர்களை நல்வழிப்படுத்துவதற்காக தன்னுடைய சேவையை விஸ்தரித்துக் கொண்டது.

இவ்வாறாக வித்திட்டு வளர்ப்பதில் அருட்தந்தை அவர்களுக்கு ஊன்றுகோலாக இருந்து தோளோடு தோள் கொடுத்து, தம்மையும் இச்சேவையில் இணைத்துக் கொண்டவர் அருட்தந்தை விமல் அடிகளாவர். இவருடைய இச்சேவை தும்பளை வாழ் மக்களுக்கு மட்டுமின்றி குடா நாட்டு ஏனைய பகுதி மக்களுக்கும் பெறுமதி மிக்கதாகவும், அளவிடற்கரியதாகவும் அமைந்தது.

இறைவனே இட்டான் இந்தப் பணியென இதயத்தேற்று
குறையேது தானும் சேராது
கடமையைச் செய்து நின்றவர்
அருட்தந்தை விமல் அடிகளார் என்றால் மிகையில்லை.

இவ் அஞ்சலியகத்தின் சேவைகளில் முக்கியமானதாக அமைந்தது மாணவர்களுக்கு கல்வி புகட்டுதல் ஆகும். "எழுத்தறிவித்தவன் இறைவனாவான்" என்ற கூற்றுக்கிணங்க அருட் தந்தை தன்னையும் முழுமையாக இப்பணியில் இணைத்துக் கொண்டார். பிரித்தானிய புகழ்பெற்ற நூலாசிரியரான H.G.wells "English is a language of world brotherhood and international understanding " என்று கூறியதற்கமைய எமது பிரதேச மக்களும் ஆங்கிலத்தில் புலமை அடைய வேண்டும் என்ற நோக்கில் "MAZENOD " என்ற ஆங்கிலக் கல்வி நிறுவனத்தினூடாக இலவச ஆங்கிலக் கல்வியை வழங்கி ஆங்கிலத்தில்

வெளியீடு : அஞ்சலியகம், தும்பளை, பருத்தித்துறை

முன்னேற்றமடைய முன்னின்று உழைத்தவர். இந் நிறுவனத்தின் மூலம் சிறுவர்கள் முதல் பல்கலைக்கழக மாணவர்கள், அரச அலுவலர்கள், போன்ற பல்வேறு தரப்பட்டவர்களுக்கும் பல்வேறு நவீன வழிமுறைகளைக் கையாண்டு ஆங்கில கல்வி அறிவை இவர் விருத்தி செய்த சேவை அளப்பரியது.

வளர்ந்துவரும் மழலைச் செல்வங்களே நாளைய நாட்டின் தலைவர்கள் என்பதை நினைவில் இருத்தி சிறுவர்களுக்கான கழகமொன்றை நிறுவுவதில் அருட்தந்தை அவர்களோடு இணைந்து செயற்பட்டவர். இக் கழகத்தின் மூலம் சிறுவர்களுக்கு மாதம் ஒரு தடைவ ஒன்று கூடல் ஒன்றை நடத்தி அவர்களின் கலைத்திறமைகளை வளர்த்தார். சிறார்கள் மட்டுமன்றி இந் நாட்டின் கண்களான இளைஞர்களுக்கும், யுவதிகளுக்குமான இளைஞர் கழகத்தை நிறுவினார். இவ் இளைஞர் கழகத்தினூடாக பல்வேறு சேவைகளை முன்னெடுப்பதில் ஆர்வத்துடனும், அயராத முயற்சியுடனும் செயற்பட்டு பெரும் வெற்றியும் கண்டார். இவ் இளைஞர் கழகத்தின் அழப்பரிய சேவையே "அஞ்சலி" என்னும் சஞ்சிகையாக அனைவரின் கரங்களிலும் தவழ்ந்துகொண்டிருக்கிறது. இவ் அளப்பெரிய சேவைக்கு அடியிட்டுக் கொடுத்தவர் விமல் அடிகளும் ஆவார். இளைஞர்களுடைய இதயத்து உணர்வுகளை எழுத்துருவில் வடிப்பதற்கு களமமைத்துக் கொடுத்தவரும் இவரே இதன் மூலம் எத்தனையோ இளம் எழுத்தாளர்களை உருவாக்கிய பெருமை அஞ்சலியகத்தையே சாரும்.

இளைஞர்கழகத்தினால் "பெண்கள் நாட்டின் கண்கள்" எனவே அவர்களுக்கு பெருமை சேர்ப்பதற்காக ஆண்டு தோறும் மகளிர்தின நிகழ்வானது கொண்டாடப்பட்டு வருகின்றது. பெண்களுடைய வாழ்வில் விடிவை ஏற்படுத்தவும் இலை மறைகாயாக இருக்கும் அவர்களுடைய திறமைகளை வெளிக்கொணரவும் நடாத்தப்படுகின்ற இவ்விழாக்களில் அருட்தந்தை விமல் அவர்களின் பங்கும் அளப்பெரியது.

வெளியீடு : அஞ்சலியகம், நெல்லண்டை, தும்பளை, பருத்தித்துறை

இப்பிரதேசத்திற்கு அருட்தந்தை விமல் அவர்கள் ஆற்றிய சேவை என்பது விலைமதிப்பற்றது, அளவிடற்கரியது. வசதிகள் நலன்கள் நிறைந்த இடத்தில் தன்னை ஒதுக்கிக் கொள்ளாமல் மக்கள் மத்தியில் எங்களுடன் ஒருவராக இருந்து வழிகாட்டி நல்வழிப்படுத்தினார். எங்களைப் புரிந்து கொள்ளும் ஒருவராக நின்று வழிகாட்டி நல்வழிப்படுத்தினார். எங்களைப் புரிந்து கொள்ளும் ஒருவராக, எங்களால் புரிந்து கொள்ளக்கூடிய ஒருவராக இருந்து இவ் அஞ்சலியக வெற்றிக்கும் மக்களுடைய நல்வாழ்விற்காகவும், தன்மைமுழுமையாக அர்ப்பணித்துக் கொண்டவர் அருட்தந்தை விமல் அவர்களின் சேவையை சுருங்கக் கூறின் இவரது தன்னலமற்ற சேவையை எண்ணும் போது மகாகவி பாரதியார் கூறியது போன்று "எங்கிருந்தோ வந்து எம் மக்களின் நண்பனாய் மந்திரியாய் நல்லாசிரியனுமாய், பண்பிலே தெய்வமுமாய், பார்வையிலே சேவகனாய், விளங்கினார் என்றால் மிகையாகாது.

இவரது அழியாப்புன்னகை, பார்வையில் காணப்படும் நேசம், மதிப்புமிக்க பெறுமதியான செயல்கள் தன்னலமற்ற சேவை தலைமைத்துவம் என்பன இவரின் குணநலன்களின் சிறப்பம்சமாகும். கலைகள் மேல் அவர் கொண்ட ஆர்வமும், அதில் அவருக்குள்ள ஆற்றல், புலமை என்பன இங்கு நடைபெற்ற பலநிகழ்வுகளில் வெளிப்பட்டுள்ளன.

இவர் ஆற்றிய சேவைகள் யாவும் இங்குள்ள ஒவ்வொருவரது இதயத்தின் மூலையிலும் இனிய நிகழ்வுகளாய் அழியாப்பதிவுகளாய் என்றென்றும் நிலைத்திருக்கும் அன்னாரின் வாழ்வின் எஞ்சியுள்ள பல ஆண்டுகளும் நீண்ட மகிழ்ச்சி நிறைந்ததாக, செழுமையானதாக, பலவெற்றிகளைத் தரக்கூடியதாகவும், திருப்தி நிறைந்ததாகவும்,அபரிதமான அமைதியையும், ஆனந்தத்தையும் அவருக்கு வழங்க வேண்டுமென எல்லாம் வல்ல இறைவனை அஞ்சலிக் குடும்பத்தினர் என்றென்றும் வேண்டுகின்றோம்.





வளர்க அவர் புகழ்.

DGSM

Fax - 0112678697




JESWIN & POINT CITY COMPUTER